விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 07 வெள்ளிக்கிழமை (20.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091





# மோதல்கள் நிறுத்தப்படாவிட்டால் மேலும் பல உயிர்களை இழக்க நேரிடும்

## எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு எச்சரிக்கை

(லண்டன்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்படா விட்டால் மேலும் பல பொதுமக்கள் உயிரிழக்கவும் படுகாயமடையவும் நேரிடும் என சர்வதேச உதவி நிறுவனமான எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)



புதுமாத்தளன் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் காயமடைந்த குழந்தையையும் தாயையும் படத்தில் காணலாம்.

## அரசாங்க ஊழியர்களுக்கு இம்முறை ஊதிய உயர்வு வழங்கப்படமாட்டாது

### ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

உலகப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இந்த வருடம் அரசாங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படமாட்டாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக சமையல் எரிவாயு, பால்மா மற்றும் பஸ் கட்டணங்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக சில அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களைக் காக்க ஐ.நா.தலையிட வேண்டும்

### முன்னாள் சட்டமா அதிபர் வலியுறுத்தல்

(சிட்னி)

வன்னி மக்களை அழிவிலிருந்து பாதுகாக்க உடனடியாக இலங்கையில் யுத்த நிறுத்தம் அமுல் செய்ய ஐக்கிய நாடுகள் அமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

## கெயர் பணியாளர் ஷெல் தாக்குதலில் பலி

(கொழும்பு)

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயத்தில் வீழ்ந்து வெடித்த எறிகணையில் கெயர் நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் நேற்று முன்தினம் கொல்லப்பட்டுள்ளார் என அந்த நிறுவனம் தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அந்தநிறுவனத்தின் பணிகளை மேற்கொண்டுவந்த ஆர்.சபீசன் (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளன் நோக்கி படையினர் நகர்வு எதிர்த்துப் புலிகள் உக்கிர தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சிக்குண்டுள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்காக அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்தை நோக்கி இராணுவத்தின் மூன்று படையணிகள் தீவிர முன் நகர்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்தது.

இதனை எதிர்த்து புலிகள் கடும் தாக்குதலை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தின் 55,58 மற்றும் 8-வது விசேட படையணியினரே இந்த தீவிர முன் நகர்வு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் சாலை தெற்கு பகுதிகளில் (12ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணெய் இறக்குமதி உரிமை நிதியமைச்சு வசமே இருக்கிறது

### அமைச்சர் பௌசி

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய எண்ணெய் இறக்குமதி உரிமையானது இன்னும் நிதியமைச்சின் வசமே இருக்கின்றது என்று பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரான ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் அறிக்கை உறுதிப்படுத்தப்படாதது

### பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குப் பிரதேசத்தில் பொதுமக்கள் கொல்லப்படுவதாக தமது அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கை உறுதிப்படுத்தப்படாததென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தலை ஐ.நா. சபையின் பொதுச் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இடம்பெற்ற வான்,ஷெல் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 105 பேர் பலி

### மேலும் 187 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னியில் நேற்றும் நேற்று முன்தினமும் மேற்கொள்ளப்பட்ட வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் 2 கைக்குழந்தைகளும் 12 சிறுவர்களும் உட்பட 105 பேர் உயிரிழந்துள்ளதுடன் 187 பேர் படுகாயமடைந்துள்ளனர் என வன்னி வைத்தியசாலை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

வன்னிப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் இரண்டு கைக்குழந்தைகளும் 12 சிறுவர்களும் உட்பட 38 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 90 பேர் காயமடைந்துள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞர்மடம் பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளையில் ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கிகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதில் 12 பேர் (12ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுமி கொலைச் சந்தேக நபர் சயனைட் அருந்தி தற்கொலை

திருகோணமலையில் ஜூட்ரெஜி வர்ஷா (வயது 6) என்ற சிறுமியை கடத்தி கப்பம் கோரி பின்னர் படுகொலை செய்த சம்பவம் தொடர்புடைய சந்தேக நபரொருவர் நேற்று சயனைட் அருந்தி தற்கொலை செய்துள்ளார்.

ஜனா எனப்படும் வரதராஜா ஜனார்த்தனன் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் என பொலிஸ் தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது.

உப்புவெளி பகுதியில் தங்களது ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை அடையாளம் காட்டுவதாகக் கூறியதையடுத்து பொலிஸார் இவரை அங்கு அழைத்துச் சென்ற போது அங்கு இரண்டு கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட தாகவும் அந்த சமயம் இவர் சயனைட் உட்கொண்டதாகவும் பொலிஸ் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

சயனைட் உட்கொண்ட நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்ட போதிலும் பின்னர் இவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சிறுமியின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைதான போதிலும் பிரதான சந்தேக நபர் ஏற்கனவே பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருந்தார்.

நேற்று சயனைட் உட்கொண்ட நபர் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ள தாக பொலிஸ் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் இந்நபருக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று அக்கட்சி அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பொது சுகாதார வெளிக்கள உதவியாளர் ஆட் சேர்ப்புக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் ஆட்சேர்ப்புக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் எதிர்வரும் 27.03.2009ஆம் திகதிக்கு முன்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணத்திற்கு தமது கல்வித் தகைமைகள் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுடனும் அவற்றின் ஒளிப்பட பிரதியுடனும் நேரடியாக சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும் .

1. வயதெல்லை 18-40 வயது வரை

2. ஆண்பாலராக இருத்தல் வேண்டும்.

3. க.பொ.த (உ/த) பரீட்சையில் இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விலங்கியல் அல்லது உயிரியல் உட்பட 3 பாடங்களில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் .

4. க.பொ.த (உ/த) தமிழ்/ சிங்கள மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்திகளுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ச)

## மகா கும்பாபிஷேகம்

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திர சேகரப்பிள்ளையார் கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி முதல் 11.15 மணிவரை நடைபெறும்.

பத்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் தைலாப்பியங்கம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை நடைபெறும். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறும். (ச-14)

## சட்டத்துறை மாணவர்களுக்கு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை மட்டம் 3 மாணவர்களுக்கான பரீட்சைகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ். பிராந்தியநிலையத்தில் நடைபெறும் என அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச-14)

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட இருவரைக் காணவில்லை

மன்னார் வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் இரண்டு மாத ஆண் குழந்தையும் நேற்று முன்தினம் இரவு முதல் காணாமல் போயிருக்கின்றனர்.

வன்னிப்பிரதேச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பொது மக்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் கப்பல் மூலமாக திருகோணமலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டு பின் அங்கிருந்து இம் மாதம் 16 ம் திகதி மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டவர்களில் நகுலேஸ்வரன் கிருசாந்தினி மற்றும் நகுலேஸ்வரன் சஞ்ஜீவன் ஆகியோரே இவ்வாறு காணாமல் போயிருக்கின்றனர்.

மேற்படி இருவர் காணாமல் போயிருக்கும் நிலையில் நேற்று இராணுவ உயர் அதிகாரிகள் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின் சுற்றுப்புற மதில்கள் முட்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டு வருவதாகவும் தெரிகின்றது.

இது அவ்வாறிருக்க, கடந்த மாத இறு திப்பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வைத்தியசாலை விடுதியில் இருந்து காணாமல் போயிருந்த நிலையில் பொலிஸாரினால் வைத்தியசாலைச் சூழலில் பாதுகாப்புகள் கருதி விசேட நடைமுறைகள் அமுல்படுத்தப் பட்டிருந்தன.

## கடத்தப்பட்ட இளைஞர் விடுவிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனொருவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் அலுவ ல்கள் நிமித்தம் விடுதி ஒன்றில் தங்கியிருந்த சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த தனபாலசிங்கம் தர்சன் (வயது 26) என்பவர் கடந்த 7ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

இவர் கடந்த 16ஆம் திகதி விடுவிக்கப்பட்டுள்ளதாக அவரது தாயாரால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# 'யாழ்ப்பாணம்' என்ற பெயரில் ஹிந்தித் திரைப்படம் தயாரிப்பு

(கொழும்பு)

இந்திய திரைப்பட இயக்குநர் சூஜித் சேர்கார் 'யாழ்ப்பாணம்' என்ற பெயரில் ஹிந்திப் திரைப்படம் ஒன்றை இயக்கவுள்ளாரென இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாண மக்களின் அன்றாட வாழ்க்கை யினைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தத் திரைப்படம் அமையுமென இயக்குநர் சூஜித் சேர்கார் தெரிவித்தார்.

ஏற்கனவே தமிழில் வெளிவந்த 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தை பார்வையிட்டதன் பின்னரே இப்படியான திரைப்படம் ஒன்றினை இயக்க வேண்டும் என்ற எண்ணம் தமக்குத் தோன்றியதாக அவர் குறிப்பிட்டார்.

இவர் ஏற்கனவே காஷ்மீர் போராளிகளின் வாழ்க்கையைப் பின்னணியாக கொண்ட திரைப்படம் ஒன்றினை இயக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை தமிழர் பிரச்சினையை பிரதிபலிக்கும் முதலாவது ஹந்தித் திரைப்படமாக இது அமையும் எனவும் அதன் இயக்குநர் தெரிவித்தார். (ச-14)

# பாடசாலை மட்ட உதைபந்தாட்டம்

# 17,19 வயது இறுதிப் போட்டியில் வென்று சென்.பற்றிக்ஸ், நெல்லியடி ம.வி.சம்பியன்

(வட்டுகோட்டை)



யாழ்.மாவட்ட பாடசாலை களுக்கிடையிலான உதைபந்தாட்டம் 17,19 வயதுப்பிரிவினருக்கான இறுதிப் போட்டியில முறையே நெல்லியடி மகாவித்தியாலயம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி என்பன சம்பியன் பட்டத்தை வென்றன.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி யின் இறுதி ஆட்டங்கள் நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் காலை 8 மணியளவில் ஆரம்பமாகியது.

போட்டியின் முதலாவது ஆட்டமாக நடைபெற்ற 17 வயதுப்பிரிவினர் 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரியும் நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயமும் மோதிக்கொண்டன இப்போட்டியின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் விறுவிறுப்பாக ஆடிய போதும் ஊர்காவற்துறைசென்.அன்ரனிஸ் 2:0 என்ற கோல்கணக்கில் நாவாந்துறை றோ.க.த.க.வித்தியாலயத்தை வெற்றி கொண்டு மூன்றாம் இடத்தினை பெற்றுக் கொண்டது.


## SAMPANTHAR MODERN HEALTH CARE HOSPITAL

☺ காலை,மாலை மருந்து எடுத்தல் OPD (யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்)

☺ வாட்டில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களை வைத்திய நிபுணர்கள் பார்வையிடுவர்.

☺ கண், காது, மூக்கு, தொண்டை, பொதுவைத்தியம், சத்திர சிகிச்சைகள், என்புமுறிவு, குழந்தை, பெண் நோயியல், வைத்திய நிபுணர்களின் சேவை.

☺ ECG, U.SCAN, MEDICAL LABORATORY

50, நாவலர் வீதி (மனோகரா தியேட்டர் அருகே)

யாழ்ப்பாணம். T.P. 222 2528, 4188

(C-2199)


17வயது பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் நெல்லியடி மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இப் போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரண்டு அணிகளும் விறுவிறுப்பாக ஆடிய போதும் இரண்டு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் போட்டி இடை வேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடை வேளையை தொடர்ந்து போட்டி விறுவிறுப்பாக ஆரம்பமானபோதும் இரண்டு அணிகளும் கோல்களை எதனையும் பெறவில்லை.

இரண்டு அணிகளின் வெற்றிவாய்ப்பை தீர்மானிப்பதற்காக தலா 5 தண்ட உதைகள் வீதம் வழங்கப்பட்டன.

தமக்கு வழங்கப்பட்ட தண்ட உதைகளை சாதகமாக பயன்படுத்திய நெல்லியடி மகா வித்தியாலயம் 4:3 என்ற கோல்கணக்கில் ஏழாலை ஸ்ரீமுகன் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு மாவட்ட சம்பியனாகியது.

இதேவேளை 19 வயதுப்பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இப் போட்டி ஆரம்பமே விறுவிறுப்பாக இருந்தது.

இடைவேளைக்கு முன்னர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 3 கோல்களையும் புங்குடுதீவு மகா வித்தியாலயம் இரண்டு கோல்களையும் பெற்றநிலையில் போட்டி இடைவேளை வழங்கப்பட்டது.

இடை வேளையை தொடர்ந்து போட்டி ஆரம்பமானபோது சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களின் அபார ஆட்டம் காரணமாக மீண்டும் ஒரு கோல் பெறப்பட்டது புங்குடுதீவு மகா



வித்தியாலய வீரர்கள் சளைக்காமல் போராடிய போதும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

புங்குடுதீவு மகாவித்தியாலய அணியினை 4:2 என்ற கோல்கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாகியது. (ச-27)

## முன்னாயத்தத் திட்டமிடல் நிகழ்வு இன்று

கரித்தாஸ்-கியூடெக் ஊக்குவிப்பு செயற்றிட்ட சி.பி.டி.பி குழுக்களுக்கான முன்னாயத்தத் திட்டமிடல்நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுப்பர் மடத்தில் நடை பெறும் என இயக்குநர் தெரிவித்துள்ளார். (ச-14)

# இன்று ஒரு தகவல்

## தவறு செய்யுங்கள்!

ஒருவர் நின்று கொண்டே யோசித்துக் கொண்டிருந்தார். "என்ன யோசனை" என்று கேட்டார் இன்னொருவர்.

"எப்படி எழுந்திருப்பது? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் அவர்.

ஏற்கனவே நின்று கொண்டிருக்கும் ஒருவர் எப்படி எழுந்திருப்பது என்று யோசிக்கிறாராம். இது எப்படி இருக்கிறது பாருங்கள்.

கீழே விழுந்தால் தானே எழுந்திருக்க முடியும்? அதனால் அவர் முதலில் கீழே விழவேண்டும். அதற்கு பின்னர் தான் அவர் எழுந்திருக்க முடியும்.

இந்த உலகத்தில் நடக்கக் கற்றுக் கொள்ள முன் கீழே விழாதவர்கள் யாராவது உண்டா? விழுந்து புரண்டு எழுந்து தானே நடக்கக் கற்றுக் கொள்கிறோம்.

நாம் தெரிந்து கொள்ள வேண்டியது ஒரு முக்கியமான உண்மை... உலகத்தில் தவறு செய்யாத மனிதர்களே கிடையாது. அதனால் எப்பொழுதாவது உங்கள் வாழ்க்கையில் தவறு செய்து விட்டால் அப்படியே மனமுடைந்து போய் உட்கார்ந்து விடாதீர்கள்.

ஒரு தவறு நடந்து விட்டால் அதை ஒரு பாடமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே தவறு மறுபடியும் நடக்காதவாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். தடைக் கல்லை படிக்கல்லாக மாற்ற வேண்டும்.

ஒரு அலுவலகத்தில் உயர் அதிகாரி ஒருவர் இருந்தார். சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்கியவர். அவர் தனக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம் என்ன சொல்வார் தெரியுமா?

இந்த நிறுவனத்தில் நீங்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் தவறு செய்யலாம், ஆனால் ஒரு விடயம், ஒரே தவறை மறுபடியும் செய்யக்கூடாது என்பாராம்.

இதை மேலோட்டமாகப் பார்க்கும் போது, அவர் ஏதோ தன்னுடைய ஊழியர்களைத் தவறு செய்யத் தூண்டுவது போல் தெரியும். ஆனால் உண்மை அப்படியல்ல.

இன்றைக்கு நடக்கிறது என்ன தெரியுமா? அநேகமாக எல்லா மனிதர்களுமே ஒரே தவறைத்தான் மீண்டும் மீண்டும் செய்கிறார்கள்.

விளையாட்டு வீரர்கள் ஒரேமாதிரியான தவறுகளை திரும்பத் திரும்பச் செய்வதுண்டு.

கணக்கு எழுதுபவரைப் பாருங்கள். ஒரே தவறை மறுபடியும் செய்வார். அலுவலகத்திற்கு வருபவர்களைக் கவனியுங்கள். ஒருநாள் தாமதமாக வந்தால் பரவாயில்லை. ஆனால் தினமும் தாமதமாக வருவார்கள்.

சரி... இதுமாதிரி, செய்த தவறையே திரும்பச் செய்வதற்கு என்ன காரணம்?

சோம்பல், ஞாபகமறதி, கவனக்குறைவு, தன்னுடைய திறமை மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை இப்படி இதில் ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம்.

ஒரு தடவை செய்த தவறை மறுபடியும் செய்வதில்லை என்று முடிவு செய்து கொண்டு அதை செயல்படுத்தக் கற்றுக் கொண்டால் போதும். வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

ஒருவர் தன்னுடைய இரண்டு காதுகளிலும் கட்டுப் போட்டுக் கொண்டு வந்தார்.

"என்ன ஆச்சு?" என்று விசாரித்தார். அவருடைய நண்பர்.

"ஒன்றுமில்லை. வீட்டில் நெடுநேரமாக ரி.வியில் கிரிக்கெற் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் மனைவி அயன் பண்ணிக் கொண்டிருந்தார்... பின்னர் அதை அப்படியே வைத்துவிட்டு சமையலறைப் பக்கம் போய்விட்டார்.

அந்தச் சமயம் பார்த்து டெலிபோன் மணி அடித்தது. அவசரமாக ஓடிப்போய் அதை எடுத்துக் காதில் வைத்தேன். அப்பொழுது தான் தெரியும் அது அயர்ன் பொக்ஸ் என்று" என்றார்.

"ஒருகாது சரி... மற்றைய காதில் என்ன ஆச்சு?"

"அதே ஆள் மறுபடியும் போன் பண்ணினானே!" என்றார் இவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# ஆசிரிய பயிலுனர்களுக்கான பொதுப்பரீட்சையினை ஏப்ரல் மாத இறுதியில் நடத்த தீர்மானம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சகல ஆசிரியர் கலாசாலைகளிலும், 2 வருட ஆசிரிய பயிற்சி நெறியை மேற்கொள்ளும் ஆசிரிய பயிலுனர்களுக்கான பொதுப் பரீட்சையை அடுத்தமாதம் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், இறுதியாக ஆசிரிய பயிற்சி கலாசாலைகளிலிருந்து பயிற்சி நெறியை முடித்து வெளியேறி வந்தவர்களுக்கான பொதுப் பரீட்சை அடுத்தமாதம் 27 ஆம் திகதி முதல் மே 5 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றிய பாடங்களில் சித்தியடையத் தவறியவர்கள் தாங்கள் பயிற்சி பெறும் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரிய பயிற்சிக் கலாசாலையுடன் தொடர்பு கொண்டு நடைபெறவுள்ள பொதுப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொள்ள முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை 2009 / 2010 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரியர் பயிற்சி நெறிக்காக சிங்கள மொழி மூலம் ஆயிரத்து 300 பேரும் தமிழ் மொழி மூலம் ஆயிரத்து 200 பேரும் ஆசிரியர் பயிலுனர்களாக ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் உள்வாங்கப்படவுள்ளனர்.

பயிற்சி நெறிக்காக ஆசிரிய கலாசாலைகளுக்கு உள்வாங்கப் படவுள்ள ஒரு தொகுதி விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு இம்முறை தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களில் மூன்று வருடத்தை பூர்த்தி செய்து ஆசிரிய உதவியாளர்களாக நியமன பெறுபவர்களும் ஆசிரிய பயிற்சி நெறிக்கான ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான அனுமதி அமைச் சரவையிலிருந்து கல்வி அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஓ-5)

## அதிபர் சேவைக்கு விண்ணப்பம் கோரல்

(திருகோணமலை)

இலங்கை அதிபர் சேவை தரம் III இலிருந்து தரம் 2 - II இற்கு பதவி உயர்வு வழங்குவதற்குத் தகைமையுடயவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் தரத்திலிருந்து 2-II தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக 3 ஆம் தரத்தின் சேவையில் 2007.12.31 ஆம் திகதி வரை 3 வருடங்களை பூர்த்தி செய்த இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற தகைமை பெற்றிருந்தும் இதுவரை அமைச்சிற்கு விண்ணப்பிக்காத தகைமை கொண்டோர் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம். என்.டீ. பண்டார அறிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த மாதம் இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3-IIIஇல் இருந்து 2 - II க்கும் 119 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் வடமாகாணத்திலிருந்து 39 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவும் அவர்களுக்கான கடிதங்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார். (5)

## இராசி பலன்

20.03.2009
(பங்குனி 7, வெள்ளிக்கிழமை)
நவமி பிற்பகல் 3.49 மணிவரை
பூராடம் முன்னிரவு 9.07 மணிவரை
இராகுகாலம் 10.47-12.17 மணிவரை
சுபநேரம் 6.17-7.47 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சரீரப் பிரயாசை, உடல் நலக் குறைவு, எதிர்பாராத செலவு, வீண்பயம். |
| இடபம் | மனச்சோர்வு, எதிர்பாராத பகை, காரிய தடங்கல், மருத்துவச் செலவு அதிகரிக்கும். |
| மிதுனம் | தெய்வ தரிசனம், பாராட்டுப் பெறுதல், பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| கடகம் | அந்தஸ்து உயர்வடையும், புதிய பொருள் சேர்க்கை, பிறருக்கு உதவுதல், ஆரோக்கியம். |
| சிங்கம் | உறவினர் தொடர்பு, வேலைச் சுமை, பெரியோர் வெறுப்பு, முயற்சி தாமதம். |
| கன்னி | கல்வியில் ஆர்வம், தெய்வ சிந்தை, உடல் நலக்குறைவு, தனவிரயம். |
| துலாம் | இனிய சம்பவம், பிரயாண நன்மை, எடுத்த காரியம் கைகூடும், தனவருவாய். |
| விருச்சிகம் | கடின வார்த்தை, முயற்சி தாமதம், தனவிரயம், கௌரவக் குறைவு. |
| தனுசு | தெய்வதரிசனம், ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், போசனசுகம். |
| மகரம் | பிரயாணம், காரியதாமதம், அமைதிக்குறைவு, சகோதரர் உதவி. |
| கும்பம் | தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், கீர்த்தி. |
| மீனம் | சுபநிகழ்வு, உற்சாகம், தொழில் முன்னேற்றம், தெய்வ சிந்தை. |

வளவன்




## கோட்டைக்காடு நொச்சியம்பதி வீதி திருத்தப்படுமா?

ஆசிரியர்,
வலம்புரி.
ஐயா,

அராலி மேற்கு கோட்டைக்காடு நொச்சியம்பதி வீதி கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் செப்பனிடப் படாது குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றது. இதனை நேரில் பார்த்தால் புரியும்.

பலமுறை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு இவ் விடயமாக அறிவித்தும் காலக்கிரமத்தில் உரிய நடவடிக்கை எடுப்போம் எனப் பதில் வந்ததேயொழிய இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இம்முறையாவது பாமரமக்கள் மீதும் கருணைகூர்ந்து இவ்வீதியை உடன் செப்பனிட வலிமேற்கு பிரதேச செயலரும், பிரதேசசபை செயலாளரும் முன்வருவார்கள் என ஆணித்தரமாக நம்புகின்றோம்.

கந்தையா ஜெயதாஸ் (மோகன்)
புதிய ஆஸ்பத்திரி ஒழுங்கை,
வட்டுத்தெற்கு,
வட்டுக்கோட்டை.

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 55 | 60 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 25 | 30 |
| அவரை | 20 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 15 | 25 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 25-30 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 35 | 40 |
| பாகற்காய் | 70 | 80 |
| வெண்டிக்காய் | 35 | 40 |
| கரணைக் கிழங்கு | 50 | -- |
| பயிற்றங்காய் | 40 | 50 |
| லீக்ஸ் | 120 | 120 |
| போஞ்சி | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | -- |
| தேசிக்காய் | 160 | 170 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 35-40 |

# இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் இதழியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு கடந்த சில ஆண்டுகளில் க.பொ.த.உயர்தரத்தில் சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

இது ஒரு வருட கால முழுநேரக் கற்கை நெறியாகும். இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய முதலாவது அணி மாணவர்களில் பலர் ஊடகத்துறையில் முன்னணியில் உள்ளனர்.

இரண்டாவது அணி மாணவர்கள் இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேற இருக்கின்றனர்.

மூன்றாவது அணி மாணவர்களின் நலன் கருதி கற்கை நெறிக்கான மொத்தக் கட்டணம் ரூ. 22 ஆயிரத்து 500லிருந்து ரூ 12ஆயிரத்து 750 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இன்று சர்வதேச ரீதியில் ஊடகக் கற்கை பல மட்டங்களில் வளர்ச்சி பெற்று பல்கலைக்கழக மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்வியை விரும்பும் மாணவர்களின் முன்னணி விருப்பப் பாடங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

ஊடகத்துறையில் பல வகையான தொழில் வாய்ப்புக்கள் விரிவு பெற்று வருவதைக் காணமுடிகின்றது.

இத்துறை சார்ந்தவர்கள் கௌரவமான தொழிலுடன் நல்ல ஊதியத்தைப் பெறுவதுடன், அரசியல், சமூக, பொருளாதாரம், கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற பல் துறைகளின் வளர்ச்சிக்கு ஊடகங்கள் மூலமாகப் பெரும் பணி செய்து வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் யாழ். பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையமும் தரும் சந்தர்ப்பத்தை யாழ்ப்பாண மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என நிலையத்தின் இயக்குநர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கேட்டுள்ளார்.

மூன்றாம் அணி மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31.03.2009 என்பது குறிப்பிடத் தக்கது. (ந)

## பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடாத்தப்படும் பெற்றோர்களுக்கான கட்டாயக் கல்வி பற்றிய கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சிறுப்பிட்டி கலைமதி சனசமூக நிலையத்தில் செ. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம், முறைசாராக் கல்வி செயற்திட்ட உத்தியோகத்தர் ச.சிவானந்தன், ஆசிரிய ஆலோசகர் இ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் செ.சரவணமுத்து தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-6)

## வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய முறைசாராப் பிரிவினரால் நடாத்தப்படும் வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சிநெறி சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

இப் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். வலய முறைசாரா பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-7)

## வாள் வெட்டில் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இரு இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு முற்றிய நிலையில் நிகழ்ந்த இவ் வாள்வெட்டு சம்பவத்தில் கச்சாயைச் சேர்ந்த சந்திரமூர்த்தி என்பவரே பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இவர் கையிலும், காலிலும் பலமான வெட்டுக்காயங்களுடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ஓ-6-30)

## முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு -III அலுவலர்களுக்கான பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இல் உள்ள அலுவலர்களுக்கான கணனிப் பரீட்சை மற்றும் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்படிவங்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களை www.np.gov.lK என்ற இணையத் தள முகவரியில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## சிங்கள பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் சிங்கள பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாக வுள்ளதாக யாழ். வலய முறைசாராப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஓ-7)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்புப்பெற்றுள்ள ஆசிரியர்கள் தங்களுடைய பங்குனிமாத சம்பளத்தைப் பெறுவதற்கு இன்று வெள்ளிக்கிழமை வடமராட்சி கல்வி அலுவலக நிதிக்கிளைக்கு சமுகமளித்து சம்பளப் பட்டியலில் ஒப்பமிடுமாறு கணக்காளர் ஆ.கிரிதரன் அறிவித்துள்ளார். (ஓ-19)




## பூஜையும் பஜனையும்

ஸ்ரீ கல்வி பத்மாவதி சமேத ஸ்ரீ கல்வி பகவான் பூஜையும் பஜனையும் நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி ஆன்மீக மையத்தில் நடைபெறவுள்ளது.

அடியார்கள் அனைவரையம் கலந்து அருள்பெறுமாறு வேண்டப்படுகின்றனர். (ஓ)

## புதிய கட்டடத் திறப்புவிழா

(அல்வாய்)

வல்வை அ.மி.த.க. பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் பூ. சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெக்கொட் திட்டப்பணிப்பாளர் த.லங்காநேசன், கௌரவ விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பாடசாலை வேலைகள் பகுதிப் பொறியியலாளர் ஜி.சிவபாலன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ. வரதீஸ்வரன் , வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க. மயிலேறும் பெருமாள், வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் கு.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-19)

## சின்னம் சூட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் இன்று வெள்ளிகிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் ஜே.ஏ.தவநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-2)

## சேவைநலன் பாராட்டுவிழா

(மருதங்கேணி)

புலோலி வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் அனுசரணையுடன் வித்தியாலய முன்னாள் அதிபர் ஆ.ஜெகநாதனின் சேவை நலன் பாராட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபா இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வித்தியாலய முன்னாள் அதிபரும் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளைத் தலைவருமான சே. ஏகாம்பரநாதன் முதன்மை கௌரவிப்புரையை நிகழ்த்தவுள்ளார். (ஓ-35)

## விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(கோண்டாவில்)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பிரதேச மட்டத்தில் நடத்தப்படும் தடகள விளையாட்டுப் போட்டிகளுக்கு 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களை இளைஞர் சேவை மன்றம் அல்லது பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பிரதேச மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டுபவர்கள் மாவட்ட, தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்ற முடியும் எனவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அறிவித்துள்ளது. (ஓ-36)

## மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

சுன்னாகம் லயன்ஸ் கழகம் நடத்தும் உடுவில் கல்விக் கோட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு, வாழ்வக மாணவர்களுக்கு வெகுமதி வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என். சண்முகவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிராந்தியத் தலைவரின் உத்தியோகபூர்வ வருகையும் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக பிராந்தியம் 9 இன் தலைவர் லயன் கே. கங்கைவேணியன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.ரவீந்திரா, உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)

காரைநகர் பிரதேச சபை நூலக ஆலோசனைக் குழுவின் ஏற்பாட்டில் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் காரைநகர் பிரதேசசபை செயலாளர் இரா.லோகநாதன் தலைமையுரையாற்றுவதையும், எழுத்தாளரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய சி.பொன்னம்பலம், காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும், விழா நாயகன் ஏற்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- கற்பகன்)

# கல்வி அபிவிருத்திப் பயணம்... யாழ்! கல்விச் சமூகத்தின் ஆய்வுப் பெட்டகம்



**யாழ்ப்பாணக்** கல்வி வலயத்தினால் "கல்வி அபிவிருத்திப் பயணம்..." என்ற ஆய்வுநூல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் வழிகாட்டலில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் சுயமதிப்பீட்டிற்கான திறவுகோலாக அமைந்துள்ளதெனலாம்.

பொதுவில் ஒவ்வொரு திணைக்களங்களும் தாம் சார்ந்த தரவுகளை சேகரிக்கின்றபோதிலும் அவை கோவைப்படுத்தப்படுவதுடன் அவற்றின் தேவைப்பாடுகள் முடிவடைந்து போகின்றன.

இதனால் குறித்த திணைக்களங்கள் தரவு சேகரித்தல்- திட்டமிடல்-நடைமுறைப்படுத்தல்-மீள் மதிப்பீடு செய்தல் என்ற விடயங்களில் தோல்வி கண்டுவிடுகின்றன.

திணைக்களங்களின் இந்த நீடித்த குறைபாட்டை முறியடிப்பது எங்ஙனம் என்ற வினாவுக்கு விடையளிப்பதாக யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் வெளியிடப்பட்ட கல்வி அபிவிருத்திப் பயணம் என்ற ஆய்வுநூல் அமைந்துள்ளது.

மிகச் சிரமமான ஒரு பணியை காத்திரமாக மேற்கொண்டதன் மூலம் யாழ்ப்பாணக் கல்வி வலயம் கல்விசார் அமைப்புகளுக்கு மட்டுமன்றி, ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஒரு வழிகாட்டலை அமைத்துக் கொடுத்துள்ளதெனலாம்.

"யாழ்.கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளையும், நடைமுறைகளையும், அவற்றின் விளைவுகளையும், ஆய்வு செய்வதினூடாகப் பாடசாலைகளின் எதிர்கால செயற்பாடுகளை வினைத்திறனுடைய தாக்கி விளைதிறனை அதிகரிப்பதே இவ் வெளியீட்டின் நோக்கமாகும்"

இவ்வாறு கல்வி அபிவிருத்திப் பயணத்திற்கு வழங்கிய ஆசிச் செய்தியில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் குறிப்பிட்ட விடயம் இங்கு ஆழ்ந்து நோக்குதற்குரியது.

தனித்து பாடசாலை மேற்பார்வை மூலம் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தி விடுவது முடியாத காரியம்.


கல்வி மேம்பாட்டில் இருக்கக்கூடிய தடைகளை இனங்காணல், அவற்றை நிவர்த்திப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், நடைமுறைப்படுத்தல் என்ற ஒழுங்கமைப்பில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளே இலக்கை அடைவதற்கு உதவும்.

எனினும்,தரவுப் பகுப்பாய்வுகள், மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவற்றை நிவர்த்திப்பதற்கான புலமைசார் ஆலோசனைகள் என்பவற்றை கல்விச் சமூகம் சார்ந்த அனைவரும் பார்ப்பதற்கும், படிப்பதற்குமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவில்லை என்ற நியாயமான குறைகூறலுக்கு முற்றுமுழுதாக முடிவுகட்டும் வகையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் க்ல்வி அபிவிருத்திப் பயணம் என்ற ஆய்வுநூல் அமைந்துள்ளது.

- ஆரம்பக் கல்வி
- தமிழ்மொழி
- கணிதம்
- விஞ்ஞானம்
- ஆங்கிலம்
- சமூக விஞ்ஞானம்
- சைவநெறி
- கத்தோலிக்க திருமறை,கிறிஸ்தவம்
- அழகியல்
- விவசாயம்
- வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
- மனைப்பொருளியல்
- உடற்கல்வி
- விசேட கல்வி
- முறைசாராக் கல்வி

என்ற பாடப் பரப்புகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை உள்ளடக்கிய இந்நூல், கல்வித் திணைக்களம் சார்ந்தவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் என்ற பன்முகச் சமூகம் தமது பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்கான தகவல் ஆய்வுப் பெட்டகமாக அமைந்துள்ளதெனலாம்.

யாழ்ப்பாணக் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை. ரவீந்திரன், பிரதிக் கல்விப் பணிப் பாளர் தி.இராசலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் ஆகியோரின் நிபுணத்துவ ஆலோசனையுடன்




வெளியிடப்பட்ட கல்வி அபிவிருத்திப் பயணம் சமகால கல்வி மேம்பாட்டிற்கு மட்டுமன்றி, எதிர்கால திட்டமிடல்களுக்கும், நடைமுறைப்படுத்தல்களுக்கும் பேருதவியாற்றும் என நிறுதிட்டமாகக் கூறலாம்.

இதனை உறுதி செய்வதாக கல்வி அபிவிருத்திப் பயணம்... என்ற ஆய்வு நூலின் வெளியீட்டு நிகழ்வு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆற்றிய உரை அமைந்துள்ளது.

அவர் ஆற்றிய உரையில்,

யாழ்.கல்வி வலயம் UNICEF அனுசரணையுடன் யாழ்.புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, கோப்பாய் மகா வித்தியாலயம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், அச்சுவேலி சென் தெரேசா ஆகிய நான்கு நிலையங்களிலும் தரமான கல்வித் தினம் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

அங்கு ஒவ்வொரு நிலையத்திலும் குடும்பப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள்,பெற்றோர்,மாணவர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஒன்றுகூடி இரு அரங்குகளாக நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றுப் பயன் பெற்றனர் -விழிப்படைந்தனர்.

இன்று நடைபெறும் கல்வித்தின நிகழ்வானது உயர்மட்டக் கல்வி அலுவலர்கள், ஆர்வலர்கள் ஒன்று சேர்ந்து எமது பிரதேச கல்வி அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்ற நிகழ்வாக அமைந்துள்ளது.

யாழ்.வலயமானது தேசியப் பாடசாலைகள் 3, தனியார் பாடசாலைகள் 3, பல பிரபல பாடசாலைகள் என்பவற்றைக் கொண்டது எனப் பெருமை பேசுவதைவிட, அதற்கேற்ப கல்வியிலே உச்சநிலையில் நாம் உள்ளோமா? எனச் சிந்திக்க வேண்டிய காலத்தின் விளிம்பில் நாம் நிற்கின்றோம். சகல தரப்பினரும் இதில் பங்காளிகளாக மாற வேண்டிய தேவை உள்ளது.

இதன் ஒரு அங்கமாக ஒரு பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு-மாற்றத்திற்கு முக்கிய பொறுப்பு வாய்ந்தவர்களாகிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பாட ரீதியாக ஒன்றிணைந்து அவர்களது பாடம் தொடர்பாக

இன்றைய நிலை ,எதிர்பார்ப்பு, முன்மொழிவுகள் என்ற வகையில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தேன். அதன் அடிப்படையில் அவர்கள் இணைந்து தமது மேற்பார்வை அறிக்கைகள், கலந்துரையாடல்கள், பகுப்பாய்வுகள் என்பவற்றின் அடிப்படையில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அவர்களின் முயற்சிக்கு மதிப்பளித்து அதனைத் தொகுத்து நூல் வடிவமாக்கியுள்ளோம். துறைசார்ந்தவர்களின் முன்வைப்புக்களுடன் இந்நூல் அதிபர்களுக்குக் கையளிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் முழுமையாகப் பங்கேற்பதன் மூலம் உங்கள் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் காத்திரமான மாற்றம் காண்பீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

அத்துடன் தலையை மாத்திரம் போசிப்பதற்குப் பதிலாகக் கூடவே இதயத்தையும் கைகளையும் போசிக்கும் கல்விமுறைமை ஒன்றின் தேவை இன்று உணரப்பட்டுள்ளது. இதனை கருப்பொருளாகக் கொண்டு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்ட அணுகுமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு சேவைக்கால ஆலோசகர்களிற்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களிற்கும் உண்டு.

இன்று இவர்களால் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் காலத்தின் எதிர்பார்ப்பின் ஆரம்பமே. அதனால்தான் இவ் அறிக்கைகளின் தொகுப்பிற்கு "கல்வி அபிவிருத்திப் பயணம்" எனப் பெயரிட்டுள்ளோம்.

எமது பயணம் சீரான ஆர்முடுகலுடன் பயணித்து உயர் நிலையை அடையவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

இதற்காக எமது பிரதேசத்தின் கல்விமான்களும், ஆர்வலர்களும், கல்வியின் பங்காளர்களும் இணைந்து பல்வேறு படிநிலைகளில் சேவைகளை வழங்கியும் ஆய்வுகளின் அடிப்படையில் வழிகாட்டல்களைச் செய்தும் உணர்வுபூர்வமாக செயற்பட வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

இச் செயற்பாட்டினால் எமது அலுவலர்கள் மிகவும் உற்சாகம் அடைந்துள்ளார்கள். தொடர்ந்து தமது பாடரீதியான செயல்நிலை ஆய்வுகளை நடைமுறைப்படுத்த ஆர்வமுடையவர்களாக உள்ளனர். அவர்களின் இச் சேவையைப் பாராட்டுவதுடன் அவர்களை வாழ்த்துகிறேன்.

அதேநேரம் க.பொ.த(உ/த) இல் நாம் தனிக் கவனம் செலுத்த வேண்டிய தேவைஉள்ளது.

க.பொ.த. (சா/த) ஆங்கிலத்தில் 45வீதம் சித்தியுள்ளபோதும் (உ/த) இல் பொது ஆங்கிலத்தில் மிகவும் குறைந்த நிலையிலேயே மாணவர்கள் உள்ளனர்.

நாம் ஒயமுடியாது-உறங்கமுடியாது சிந்திக்கவேண்டும்.

பிரச்சினைகள் இனங்காணப்பட வேண்டும்.

பொருத்தமான தீர்வுகள் கண்டறியப்படவேண்டும்.

அவை செயற்படுத்தப்பட வேண்டும்.

வெற்றிகாண வேண்டும்.

எமது அதிபர்கள் வல்லவர்கள், நல்லவர்கள். நான் இங்கு கடமையேற்ற போது பல பிரச்சினைகளை இனங் கண்டேன்.

**விதுரன்**

ஆரோக்கியமாக அவர்களிற்கு வழி காட்டினேன்.அதன் அடிப்படையில் செயற்பட்டு பாரிய மாற்றங்களைச் செய்துகாட்டியுள்ளார்கள்.

உதாரணமாக தர உள்ளீடு, உயர் மட்டக் கல்விச் செயற்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துதலில் பாரிய முன்னேற்றம் காட்டி என்னை மகிழ்வடையச் செய்துள்ளனர். அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன்.

கல்விப் பணிப்பாளரின் இந்த உரை கல்விப் பயணத்தின் நோக்கத்தை, இலக்கை பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுகின்றது.

# வட்டுக்கோட்டை ஆரம்ப மருத்

# திறப்பு விழா சிறப்பு

## வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் திருக்கோவில் பிரதம குரு வழங்கிய ஆசிச் செய்தி



எமது பிரதேசமாகிய வட்டு மூளாய் வீதியில் ஆரம்ப மருத்துவ நிலையம் ஒன்று ஆரம்பிப்பதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். எமது ஊர் மக்களின் நலன் பேண இப் புதிய வைத்தியசாலையை எமது ஊர் அன்பாளர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஆரம்பித்திருப்பது மகத்தான தர்மகைங்கரியம் ஆகும்.

அளப்பரிய இப் பணிக்கு ஆதாரமாக தேவைக்குரிய நிலத்தை வழங்கியவர்கள் என்றென்றும் எமது நன்றிக்கு உரியவர்கள். இம் மருத்துவமனையானது இன்று முதல் என்றென்றும் புதுப் பொலிவுடன் மிளிரவும் மேலும் பல மருத்துவ வசதிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கவும் பன்னெடுங் காலமும் மக்கள் சேவையில் திகழவும் எல்லாம் வல்ல உடுக்கியவளை ஸ்ரீ விநாயகப் பெருமானின் பாத கமலங்களைப் பணிந்து அருளாசி கூறி அமைகிறேன்.

**கணபதி பூஜா துரந்தரர்**
**சிவ ஸ்ரீ ச. நடராஜசர்மா**
**உடுக்கியவளைப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு.**


## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



கடல்வளம், வயல்வளம், மண்வளம் என்ற பல்வேறு வளங்களையும் வழுக்கியாறு என்னும் யாழ். மண்ணின் ஒரே ஒரு ஆற்றையும் தன்னகத்தே கொண்டு நிலத்தியல்பால் நிமிர்ந்து நிற்கும் வட்டுக்கோட்டை என்றதும் எவர்க்கும் நினைவில் வருவது புகழ்பூத்த பழைமை மிகு யாழ்ப்பாணக்கல்லூரியே ஆகும்.

இவ்வாறு பல்வேறு சிறப்புக்களையும், தனதாக்கிக் கொண்டுள்ள வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஆதார வைத்தியசாலைகள் அமைந்து மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றிய போதிலும் வட்டுக்கோட்டை தொகுதியை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் வட்டுக்கோட்டை எனும் குறிப்பிட்ட இடத்தில் ஒரு வைத்திய நிலையத்தின் தேவை கருதி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிகழ்வாகும். இதுகாலவரை தனக்கென நிரந்தர இடமொன்று இல்லாத நிலையில் தற்காலிக கட்டடங்களில் இயங்கிய இம் மருத்துவப் பராமரிப்பு நிலையம் இன்று தயாள சிந்தையுள்ள தனிநபர் ஒருவரின் தயவினால் கிடைக்கீப்பெற்ற காணியில் உலக வங்கியின் அனுசரணையுடன் நிரந்தரக் கட்டடமொன்றில் இயங்க ஆரம்பித்துள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையமாக எழுந்துள்ள இக் கட்டடம் நாளடைவில் நவீன வசதிகளுடன் மருத்துவ வசதிகள் அனைத்தையும் கொண்ட மருத்துவ மனையாய் வளர்ச்சியடைந்து வட்டுக்கோட்டை மக்களுக்கு நற்சேவையாற்ற வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகின்றேன்

**க. கணேஷ்**
**அரசாங்க அதிபர் / மாவட்டசெயலர், யாழ்.மாவட்டம்.**



இடம் :- விளாத்தித்தோட்டம், மூளாய்
காலம் :- 20.03.2009 வெள்ளிக்கிழ
நேரம் :- முற்பகல் 9.30 மணி
தலைவர் :- வைத்தியகலாநிதி திருமதி
(வட்டுக்கோ
விழாத் தலைவர்: திரு. இ. பொன்னுரா
(உப. தலைவர் அபி
பிரதம விருந்தினர் திரு. இ. இரவீந்திரன்
(செயலாளர் சுகாதார சேவை
*விழாச் சிறப்புற நிகழ அ*
வைத்தியசாலை உ

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எமது சபை 2008.04 10 இல் ஆரம்ப பொதுக் கூட்டத்தை நடாத்தி புதிய செயலமைப்பு ஒன்றை உருவாக் கியது.

இச் சபையே இக் கட்டிடத்திற்கான அத்திவார விழாவையும் (2008.04.18) நடாத்தி இன்று (2009.03.20) திறப்பு விழாவையும் நடாத்தி பெருமைப்படுகின்றது. இந் நற்பணிக்கு அறக் கொடைபுரிந்த திரு. நவரத் தினம் கருணாகரன் குடும்பத்தின் செயலைப் பாராட்டாமல் இருக்க முடியாது,

இது எமது மக்களுக்கு மட்டுமன்றி வெளி நாடுகளில் வாழும் எம் மக்களுக்கும் பெருமையையும், சிறப்பையும் தரும் செயலாகும். அவர்களின் குடும்பம் வாழையடி வாழை யாக வாழ இறை அருள் புரிய இறைஞ்சுகின்றேன்.

**இ.கு. சிவஞானம்**
**வட்டுக் கோட்டை ஆ. ம.பிரிவு**
**அபிவிருத்திச் சங்கம்.**

## இளைஞர் உடலுள விருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எமது பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக இருந்து வந்த வட்டுக் கோட்டை ஆரம்ப மருத்துவ நிலையம் பல காலமாக பல தனியார் வீடுகளில் அடிக்கடிமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வந்தது. இவ் வைத்தியசாலையினை நிரந்தரமான ஓர் இடத்தில் மிக அழகாக அமைக்க வேண்டும் என இளைஞர் உடலுள விருத்தி சங்கத்தினராகிய நாம் ஆவல்கொண்டதன் காரணமாக நாம் நினைத்ததினை அடைய தெய்வம் துணை நின்றது போல் எம் ஊரைச் சேர்ந்தவரும் மலேசியாவில் வசிப்பவருமாகிய நவரத்தினம் கருணாகரன் என்ற பெருந்தகை தனது தாயாரின் நினைவாக இங்கிருக்கும் தனது சகோதரி திருமதி கந்தசாமி அவர்களின் உதவியுடன் வழங்கப்பட்ட காணியில் கட்டப்பட்ட இவ் வைத்தியசாலையின் மூலம் எமது பிரதேசத்தில் வாழும் மக்கள் அனை வரும் பயன் பெற வேண்டுமென இறைவனை பிரார்த் திப்பதுடன் உதவிய குடும் பத்தினரை சகல சௌபாக்கியங்களும் பெற்று நீண்ட காலம் வாழ பிரார்த்திப் போமாக.

**இ. தயாகரன்**
**செயலாளர் இளைஞர் உடலுள விருத்திச் சங்கம்**
**வட்டுக் கோட்டை.**



அமரர் திருமதி. நவரத்தினம் திலோத்தமை
பிறப்பு : 19.07.1916 இறப்பு : 14.08.1993
இக்கட்டிடத்திற்குரிய காணி இவ் அம்மையாரின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.


கட்டடப் பொருட்கள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள், மின்சார உபகரணங்கள் என்பவற்றை மொத்தமாகவும், சில் லறையாகவும் பெற்றுக்கொள்ள
சச்சியா இரும்பகம்
உரிமையாளர்: திரு.சி.சச்சிதானந்தம்
தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.

R.S.T.றோஸ் நாடு
அரிசி வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றக்கொள்ளவும் கொப்பரா, எள்ளு மற்றும் இலுப்பைப்பருப்பு போன்றவற்றை 3கிலோ முதல் ஆயிரம் கிலோ வரை உடன் இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக ஊற்றவும் நாடவேண்டிய ஒரே இடம்
பாலன் அரிசி ஆலை
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

சகல விதமான பல சரக்குப்பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், கால் நடைத்தீவனங்கள்என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

கரன் ஸ்ரோர்ஸ்
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

சகல வகையான பல சரக்குப் பொருட்கள், கட்டடப் பொருட்கள், பால்மா வகைகள், கால்நடைத்தீவனங்கள், அபிஷேகப்பொருட்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

அம்பாள் ஸ்ரோர்ஸ்
(பேபி கடை)
அற்கின்சன் வீதி, வட்டுக்கோட்டை

லொறி, கார், பஸ், ஆட்டோ, மோட்டார்சைக்கிள், சேவிஸ் செய்து கொடுக்கப்படும் எஞ்சின் ஒயில், கியர் ஒயில், பனற் ஒயில் வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
எந்த வீதி ஊடாகவும் வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கு வர


P.S. SERVICE STATION
P.S சேர்விஸ் ஸ்ரேசன்
தொ.பே. 021 222 9247
257/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எமது இவ் வைத்தியசாலையினை விரைவாகவும், அழகாகவும் கட்டி முடித்த இந்த நிறுவன உரிமையாளர் கே. ஜெகதீஸ்வரன் அவர்களையும், ஊழியர்களையும் பாராட்டுவதுடன் அவர்களின் இந்தப் பணி மேலும் சிறப்புற எல்லாம் வல்ல உடுக்கியவளை பிள்ளையாரை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கமும் உடலுள விருத்திச்சங்கமும்
MRES Constructor &Sales
Building Construction, Timber Works, Iron Work & Material Supply
தொ.பே. 077 6235122
Power House Road, Chunnakam South, Chunnakam

# ருத்துவ பராமரிப்பு பிரிவு நிலைய

# பு மலர் – 20.03.2009




## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



வட்டுக்கோட்டை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நிலையத்திற்கு புதிய கட்டிடம் ஒன்று திறந்து வைக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். நீண்ட காலமாக இவ் வைத்தியசாலை ஓர் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்தது. தற்பொழுது இவ் வைத்தியசாலைக்கு இப் பிரதேசத்தைச் சேர்ந்த நன் கொடையாளர் ஒருவரால் வழங்கப்பட்ட காணியில் உலக வங்கியின் சுகாதாரத் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 70 இலட்சம் ரூபா செலவில் இவ் வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையை அமைப்பதற்கு உந்து சக்தியாகவும் பக்க பலமாகவும் நின்ற முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அமரர் வைத்திய கலாநிதி எஸ். குமார வேற்பிள்ளை அவர்களை இத் தருணத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். மக்கள் தாம் வாழும் பிரதேசங்களிலேயே தமக்கு தேவையான வைத்திய சேவைகளை இயன்றளவிற்கு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இன்று திறந்து வைக்கப்படும் இவ் வைத்தியசாலை இப் பிரதேச மக்களின் சொத்தாகும். இதனைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது இப் பிரதேச மக்களின் கடமை. இவ் வைத்திய சாலை நீண்ட காலம் நிலைத்து நின்று இப் பிரதேச மக்களுக்கு சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

**வைத்திய கலாநிதி அ. கேதீஸ்வரன்,**
**பிராந்தியப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள் ,யாழ்ப்பாணம்.**

## மக்கள் பணி சிறப்புற வாழ்த்துகின்றேன்



கலை,கலாசாரம் பண்பாட்டு விழுமியங்கள் சிறந்து மிளிரும் வட்டுக்கோட்டை பிரதேசத்தில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நிலையம் என்னும் பொருள் பொதிந்த பெயரைக் கொண்ட மருத்துவ நிலையம் திறந்து வைத்ததன் மூலம் மக்களின் இன்னல் தீர்க்கும் பணியாகிய நோய் தீர்க்கும் அற்பணிப்பு நிறைந்த உயிர் காக்கும் சேவையை வட்டுக் கோட்டை வாழ் மக்கள் இலகுவாக பெறும் நோக்கில் அமைக்கப்பட்ட இவ் நிலையம் மென் மேலும் மெருகூட்டப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு கிராமிய வைத்திய நிலையம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு மக்கள் பணி மென் மேலும் சிறப்புற நடை பெற வேண்டுமென வாழ்த்துவதோடு, பொருத்தமான இடத்தில் பொருத்தமான விதத்தில் அமைப்பதற்கு மூளாய் வீதியில் விளாத்தித் தோட்டம் என்னும் பெயருடைய காணியை அன்பளிப்பு செய்த பெருமகனாரையும் வாழ்த்தி இவ் மருத்துவ நிலையத்தை உருவாக்குவதில் அயராது உழைத்த அனைவரையும் பாராட்டுவதோடு அனைவருக்கும் எல்லாம் வல்ல இறையருள் நிறைவாக கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி

**திருமதி ரேணுகா கஜேந்திரன்**
**வட்டுக் கோட்டை ஆ.ம.ப.பிரிவு பொறுப்பதிகாரி)**
**நிலையத் தலைவர்.**

## முன்னாள் வலி - மேற்கு பிரதேச சபை தலைவரின் வாழ்த்து



எனது மக்களுக்கு சேவை செய்வதற்காக எனது ஊரில் இப்படியான ஓர் வைத்தியசாலை அமைப்பதற்கு காணி தந்துதவிய குடும்பத்தினருக்கு நன்றி கூறுவதுடன் இவ் விழா சிறப்புற நடைபெறவும் எல்லாம் வல்ல அடைக்கலம் தோட்டம்ள முருகன் அருள்பாலிப்பாராக!

**சே. மகேந்திரன்(வள்ளுவன்)**

டம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
வெள்ளிக்கிழமை
மணி
நிதி **திருமதி. ரேணுகா கஜேந்திரன்** அவர்கள்
(வட்டுக்கோட்டை. ஆ.ம.ப. பிரிவு பொறுப்பதிகாரி)
பொன்னுராசா (ச.நீ) அவர்கள்
லைவர் அபிவிருத்தி சபை)
இரவீந்திரன் அவர்கள்
ாதார சேவை அமைச்சு வடமாகாணம்)
***று நிகழ அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.***
**தியசாலை உத்தியோகத்தர்களும் அபிவிருத்திச் சபையினரும்.**

## திறப்பு விழா சிறப்புற வாழ்த்தும் வர்த்தகப் பெருமக்கள்


மலர் அமைப்பு:-

*திறப்பு விழா சிறப்புற எல்லாம் வல்ல அருள் மிகு வட்டு கண்ணகை அம்மனையும் கண்ணலிங்கேஸ்வரர் பெருமானையும் பிரார்த்தித்து நிற்கும்*



**ஸ்ரீமுருகன் களஞ்சியம்**
தொ.பே. 021 222 5459
மூளாய் வீதி ,வட்டுக்கோட்டை

*அழகு சாதனப்பொருட்கள், அன் பளிப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், பாதணி வகைகள் என்பவற்றினை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள.*
**லக்ஸ்சுமி அழகு மாடம்**
தெல்லிப்பளை வீதி ,வட்டுக்கோட்டை.

*உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கும் ,பக்ஸ் ,போட்டோ பிரதி போன்ற வற்றை பெற்றுக்கொள்ளவும்*
**கற்பகன் தொலைத் தொடர்பகம்**
தொ.பே. ,பக்ஸ் 021 222 5416 021 222 8209
டச்சுறோட்,வட்டு வடக்கு, சித்தன்கேணி.

*கால்நடைத்தீவனம், மருந்துவகைகள் ,பால் நிலையம் (சுழிபுரம் , வட்டுக்கோட்டை ) கால் நடைவிற்பனை போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்ள*
**வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**
அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

*நெல் புழுங்கல் உடைத்தும், தீட்டியும் (வெ) அரிசி தானிய வகை மிளகாய் என்பன அரைத்துப்பெற்றுக்கொள்ள.*
**மிதுசன் அரைக்கும் ஆலை**
மூளாய் வீதி ,வட்டுக்கோட்டை.

*சகல விதமான பல சரக்குப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள*
**பவித்திரா பல்பொருள் வாணிபம்**
மாவடிச்சந்தி , வட்டுக்கோட்டை. உரிமையாளர்: சு.செல்வராசா.

*கேபில் லைன் தொலைக்காட்சி, பழைய ,புதிய திரைப்பட இறுவட்டுக்களைப் பெற்றுக்கொள்ள*
**ஈசன் வீடியோ சென்ரர்**
மாவடிச்சந்தி , வட்டுக்கோட்டை.

*உள்ளூர் வெளியூர், தொலைபேசி சேவையினை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்*
**மாஸ்ரேஸ் தொலைத் தொடர்பகம்**
சந்தை வீதி ,வட்டுமேற்கு.
உரிமையாளர்: நி. முருகானந்தன்.
தொ.பே. 060 221 2541 060 221 4054

*சகல விதமான குளிர்சாதனப்பெட்டிகள் மின்சார உபகரணங்களையும் சிறந்த முறையில் விரைவாக திருத்தம் செய்து பெற்றுக்கொள்ள*
**ஏசியன் கூலஸ்**
மூளாய் வீதி ,வட்டுக்கோட்டை.
தொ.பே. 077 4745686 077 9819 610

*சகல விதமான கடைச்சல் வேலைகளையும் உடனுக்குடன் சிறந்த முறையில் செய்து பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.*
**சாந்தன் கடைச்சல் பட்டறை**
மூளாய் வீதி ,வட்டுக்கோட்டை.
உரிமையாளர்:ந. சாந்தலிங்கம்

*உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கும், சகல விதமான ஆங்கில கடிதங்களும் ரைப்பிங் செய்து கொள்ளவும், வெளி நாட்டில் இருக்கும் உறவுகளின் புகைப்படங்களையும் கடிதங்களையும் மின் அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளவும், இன்ரர் நெற் பார்வையிடவும் தொடர்பு கொள்ளவும்*
**ஸ்ரீராஜ் தொலைத்தொடர்பகம்**
மாவடிச்சந்தி ,வட்டுக்கோட்டை.

*2007 ,2008 ஆம் ஆண்டுகளில் வட மாகாணத்தில் சிறந்த உற்பத்தியாளருக்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றுக்கொண்ட நாயகி நிறுவனத்தினரின் நாயகி தயாரிப்புகளான மிக்சர் ,பகோடா , தட்டை வடை ,முறுக்கு ,கச்சான்அல்வா, எள்ளுருண்டை, இனிப்பு வகைகள்*
**நாயகி தயாரிப்புக்கள்**
உரிமையாளர்:சு.நிமலேந்திரன்
வட்டு க்கிழக்கு, வட்டுக்கோட்டை.

*உள்நாட்டு ,வெளிநாட்டு தொலைபேசி அழைப்பு கள்*
WESTERN UNION *பணப்பரிமாற்ற சேவை*
**வட்டு சிவன் தொலைத்தொடர்பகம்**
தொ.பே. 021 222 3734 0602212470
சிவன் கோயிலடி, வட்டு மேற்கு , வட்டுக்கோட்டை.






**இ.ச.பேரம்பலம் நிறுவனம்**
இல. 50, 52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2988 222 3096

**கஜமுகன் ஹாட்வெயார்ஸ்**
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2833 222 7182

# வடக்கில் 24 மணிநேரமும் சேவையில் ஈடுபடும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு

(கொழும்பு)

விடுவிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி வருகை தரும் மக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்க அமைக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவப் பிரிவு 24 மணித்தியாலங்களும் இயங்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பணிகளை சிறப்பாக ஒருங்கிணைக்கும் நோக்கில் வவுனியா,திருகோணமலை மற்றும் பதவியா ஆகிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு தலா 3 வைத்தியர்கள் வீதம் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ் தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

கடந்த மாதம் 11 ஆம் திகதி முதல் இம்மாதம் 14 ஆம் திகதி வரை திருகோணமலை வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 651 ஆகும். இக்காலப்பகுதியில் 26 குழந்தைகளும் பிறந்துள்ளதோடு ஆயிரத்து 557 சத்திரசிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிக சிகிச்சைகளுக்காக சுமார் மூவாயிரம் பேர் கொழும்பு, கண்டி, வவனியா, மன்னார் மற்றும் பொலநறுவை ஆகிய வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ள னர்.

வவனியாவிலுள்ள 12 நலன்புரி முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ள 33ஆயிரத்து 840 பேரின் சுகாதார விடயங்களைக் கவனிப்பதற்காக சத்திர சிகிச்சை நிபுணர்கள் 68பேரும், 5மயக்க மருந்து நிபுணர்களும், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் 20பேரும்,116 தாதிமார்களும் அனுப்பிவைகப்பட்டுள்ளனர்.

இதுதவிர ஒவ்வொரு நலன்புரி முகாம்களுக்கும் ஒரு அம்புலன்ஸ் வண்டிவீதம் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா,செட்டிகுளம் மற்றும் பூவரசன்குளம் ஆகிய பிரதேசங்களிலுள்ள மருத்துமனைகளுக்கு 7 அம்புலன்ஸ் வண்டிகளும் புல்மோட்டையிலுள்ள நடமாடும் வைத்தியசாலைக்கு 20 அம்புலன்ஸ் வண்டிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஓ-5)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2007ற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | | |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய்- 837 | | |
| 3 | காங்கேசன்துறை - 031 | | |
| 4 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | | |
| 5 | யாழ்.பிரதானவீதி - 104 | 06.06.2009 | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய் - 865 | | |
| 7 | ஊர்காவற்றுறை - 105 | 07.06.2009 | |
| 8 | நெல்லியடி - 106 | | |
| 9 | அச்சுவேலி- 107 | 08.06.2009 | |
| 10 | சங்கானை- 108 | | மக்கள் வங்கி, யாழ்/ ஸ்ரான்லி வீதிக்கிளை -030 |
| 11 | சுன்னாகம்- 109 | 13.06.2009 | |
| 12 | சாவகச்சேரி - 110 | | |
| 13 | சேவை நிலையம், கொடிகாமம் - 904 | 14.06.2009 | |
| 14 | வல்வெட்டித்துறை - 141 | & | |
| 15 | யாழ்.பல்கலைக்கழகம் -162 | | |
| 16 | சேவை நிலையம், திருநெல்வேலி - 855 | 15.06.2009 | |
| 17 | யாழ். கன்னாதிட்டி - 284 | | |
| 18 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |
| 19 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்
வடவலயம்,

மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2206)


# ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

தகவல் தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மூலம் கல்வித் துறையை வலுவூட்டும் பரந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பலருக்கு கணனி பற்றிய அறிவோ பயிற்சிகளோ கிடையாது. இந்த வேலைத் திட்டத்தின் மூலம் இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் என கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்ப அலுவல்கள் பிரிவின் பணிப்பாளர் நீல் குணதாச தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு 50 மணித்தியால அடிப்படை கணனிப் பயிற்சிகள் வழங்கப்படும். இதற்கென ருவன்புர, கஹவத்த கல்விப்பீடம் தகவல் தொழில்நுட்பத்தைப் போதிக்கும் ஆசிரியர் கலாசாலையாக மாற்றப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சகல இரண்டாம் நிலைக் கல்வி நிலையங்களிலும் கணனி ஆய்வுகூடங்கள் மேம்படுத்தப்படும்.

தற்போது 136 மாணவர்களுக்கு ஒரு கணனி என்ற அடிப்படையிலேயே பாடசாலையில் கணனி வசதிகள் காணப்படுகின்றன. இந்த விகிதத்தைக் குறைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. அடுத்த ஆண்டு முதல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் தொழில்நுட்பத்தையும் ஒரு பாடமாக இணைத்துக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஓ-5)

# கருத்தரங்கும் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தால் இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் வீதிப் போக்குவரத்து சம்பந்தமான கருத்தரங்கும் செயலமர்வும் நடத்தப்படவுள்ளது. (6)

# 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும்' செயற்பாட்டில் இந்தியா

## பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் இல.கணேசன் தெரிவிப்பு

(சென்னை)

பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவதுபோன்று இந்தியாவின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. போருக்கும் ஆதரவாக இருந்துவிட்டு, மருத்துவ உதவிகளையும் செய்து வருகிறது. இந்திய அரசின் இந்தச் செயலையும் பாரதிய ஜனதாக் கட்சி மக்கள் முன் அம்பலப்படுத்தும் என்று பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் இல.கணேசன் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் போர் வெற்றிகளுக்கு இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. இதன்மூலம் இந்தியாவின் நிலை தெளிவாகத் தெரிகின்றது. தே.மு.தி.க.தன்னுடைய தனித் தன்மையை இழக்காமல் இருக்கவேண்டுமென்றால் பா.ஜ.க. கூட்டணிக்கு வரவேண்டும். தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சிகளுக்கு எதிராகத் தான் தே.மு.தி.கவின் வாக்கு வங்கி அதிகரித்துள்ளது. இந்த இரண்டு கூட்டணிகளில் ஏதாவது ஒன்றில் தே.மு.தி.க. இடம்பெற்றால் அதன் தனித்தன்மையை இழந்து விடும்.

மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசு பச்சையான மதவாத அரசாக செயல்படுகிறது. ஜவஹர்லால் நேரு காலம் தொடங்கி பல்வேறு பிரதமர்கள் ஆட்சியில் இருந்தபோது ஜனாதிபதி உரையில், தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்கு உதவி செய்வதாக அறிவிப்புகள் வரும். இந்தமுறை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவோம். மதச் சார்பற்ற ஒரு நாட்டில் மதத்திற்கு ஒருசட்டம் என்பதை ஏற்கமுடியாது. அரசியல் சாசனத்தில் கூட ஒரு பொதுவான சட்டம் தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நாங்கள் அமுல்படுத்துவோம் என்றார். (ஓ-5)

# ஈரானுக்கு ஏவுகணை விநியோகம் ஒப்புக் கொண்டது ரஷ்யா

(மொஸ்கோ)

ஈரானுக்கு அதிநவீன ஏவுகணைகளை விநியோகம் செய்ய இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒப்பந்தம் மேற்கொண்டதை ரஷ்யா தற்போது அங்கீகரித்தது. அமெரிக்க அதிபராக புஷ் இருந்தபோது ஈரான் நாட்டை "ரவுடி நாடு' எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஈரான் அரசால் அண்டை நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் ஆபத்து ஏற்படும் என எச்சரித்திருந்தார். இந்நிலையில், ஈரான் நாட்டுக்கு அதிநவீன எஸ் -300 ரக ஏவுகணையை விநியோகம் செய்ய இரண்டு ஆண்டுகளுக்கு முன் ரஷ்யா ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்த விஷயம் சமீபத்தில் அம்பலமானது. இதையடுத்து, ரஷ்யா இந்த உண்மையை ஒப்புக்கொண்டது.

இதுகுறித்து ரஷ்யா இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், ''எஸ் -300 ஏவுகணையை ஈரானுக்கு விநியோகம் செய்ய ஒப்பந்தம் மேற்கொண்டாலும், சர்வதேச சூழ்நிலையை கருத்தில் கொண்டு நாங்கள் ஏவுகணையை விநியோகிக்கவில்லை. இன்னும் அந்த ஒப்பந்தம் காலாவதியாகவில்லை.

படிப்படியாக இந்த ஒப்பந்தத்தை அமுல் செய்ய யோசித்து வருகிறோம் என்றார். ஈரானுக்கு இந்த ஏவுகணையை விநியோகம் செய்தால் ரஷ்யா, மேற்கத்திய நாடுகளின் பகையை சம்பாதித்துக்கொள்ள வேண்டியிருக்கும் என அரசியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஓ-5)

# தலிபான்கள் தமது அமைப்பினர் 210 பேரை விடுவிக்க வலியுறுத்து


(இஸ்லாமாபாத்)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமது அமைப்பைச் சேர்ந்த 210 பேரை விடுவிக்கும்படி, பாகிஸ்தான் அரசிடம் தலிபான்கள் வலியுறுத்தியுள்ளனர். தலிபான் அமைப்பினர் தெரிவிக்கையில், பாக்.அரசுக்கும், தெரிக்-நிபாஸ்-இ-ஷரியா முகமதி அமைப்புக்கும் இடையே கடந்த மாதம் ஒப்பந்தம் கையெழுத்தானது.

தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள தலிபான் அமைப்பைச் சேர்ந்த 210 பேரை விடுவிப்பதாகவும் இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இதன்படி,சிறையில் அடைக்கப்பட்டுள்ள 210 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடையே, ஆப்பான்-பாக், எல்லையில் பதுங்கியுள்ள தலிபான் உள்ளிட்ட அமைப்பினருக்கு எதிரான மறைமுக போரை விரிவுபடுத்துவது குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமா ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ஓ-5)

# கைவிரலில் கணனி சேமிப்பகம்



மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் தனது விரல்களிலொன்றை இழந்த பின்லாந்து கணனி மென்பொருள் நிபுணர் ஒருவர், கணனி யு.எஸ்.பி. இணைப்பு உபகரணத்தை உள்ளட்க்கிய செயற்கை விரலொன்றை வடிவமைத்து தனது இழந்த விரலுக்குப் பதிலாக உபயோகித்து வருகிறார்.

ஜெரி ஜலாவா என்ற மேற்படி கணனி மென்பொருள் நிபுணரால் உருவாக்கப்பட்ட இந்த 'யு.எஸ்.பி.' விரலானது, 2 'ஜிபி' நினைவகத்தைக் கொண்டுள்ளதுடன் படங்கள், திரைப்படங்கள் மற்றும் மென்பொருள் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை சேமிக்கக் கூடியதாகும்.

இந்த செயற்கை விரலானது தேவைப்படும் சமயத்தில் கையிலிருந்து சுலபமாக வேறு பிரிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளதால், பாவனைக்கு இலகுவானது என ஜெரி ஜலாவா கூறினார்.

அத்துடன் மேலும் கூடுதலான அளவு தரவுகளையும் கோப்புகளையும் சேமிக்கக் கூடிய வகையில், தனது கைவிரல் 'யு.எஸ்.பி' உபகரணத்தை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஓ-6)

மற்றவர்களை மகிழ்விப்பதில் உண்மையான மகிழ்ச்சி அமைந்திருக்கிறது.

– இந்தியா

வலம்புரி

## யாழ்.வரும் பொதுமக்களின் நலன்பேண அனைவரும் தயாராக வேண்டும்

வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் யாழ்.குடாநாட்டுக்கு வந்த வண்ணமுள்ளனர்.

நேற்று முன்தினம் முப்பதிற்கும் மேற்பட்ட படகுகளில் அறுநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பருத்தித்துறைமுனைப் பகுதியை வந்தடைந்தனர்.

யுத்தத்தினால் எல்லா வளங்களையும் இழந்து வெறுங்கையுடன் வருகின்ற எங்கள் உறவுகள் தனித்து தங்கள் உடைமைகளை மட்டும் இழந்துவிடவில்லை.

தங்கள் பிள்ளைகளை,சகோதரர்களை, பெற்றோரை யுத்த வெறிக்கு பறிகொடுத்துவிட்டு துன்பச் சுமையை நெஞ்சில் சுமந்து கொண்டு வருகின்றனர்.

வன்னி யுத்தத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்துவிட்டோம் இனி நிம்மதியாக வாழலாம் என்ற நிலை இருந்தால் கூட நாம் ஓரளவுக்கு ஆறுதல் அடைய முடியும்.

ஆனால் யாழ்.குடாநாட்டுக்கு வந்த அவர்கள் நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்படுவர். அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள உறவுகளைப் பார்ப்பதற்கு வாய்ப்புக் கிடைக்க மாட்டாது.

பட்ட காலிலே படும் என்ற பழமொழிக்கமைய உயிரிழப்பு, சொத்திழப்பு, சுதந்திரமற்ற வாழ்க்கை என்ற துன்பம் அவர்களை தொடர்கிறது.

இங்குதான் நாம் ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டுள்ளோம்.

ஆம், யுத்தத்தால் பாதிப்படைந்து நிர்க்கதியாகியுள்ள எங்கள் உறவுகளுக்கு, உணவுப்பண்டங்களை, உடுபுடைவைகளை, மருந்துப் பொருட்களை, நிதி உதவிகளை வழங்க அனைவரும் முன்வரவேண்டும்.

பாடசாலைகள், உயர்கல்விக் கூடங்கள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் தங்களால் இயன்ற உதவியை வழங்கத் தயாராகுவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

வன்னியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு வருகை தரும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு இருப்பதனால், அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்க நாம் ஆயத்தமாகுவதும் கட்டாயமானதாகும்.

இது விடயத்தில் அரச சார்பற்ற அமைப்புகளும் தங்கள் பங்களிப்பை ஆற்ற முன்வர வேண்டும்.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலன்கருதி யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் விசேட மருத்துவ சேவையை நலன்புரி நிலையங்களில் நடத்தவும், அதற்கான அனுமதியை படைத்தரப்பு வழங்கவும் தயங்கக்கூடாது.

இவற்றுக்கு மேலாக வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் மக்களின் பெயர் விபரங்களை வெளிப்படுத்தி, தகவல்களை உறவினர்கள் அறிய படைத்தரப்பினர் உதவ வேண்டும்.

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் பயணத்துக்கான பேச்சுக்கள் ஆரம்பம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு பயணம் செய்வது தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் போர் இடம்பெற்று வரும் வன்னி பகுதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் பயணம் செய்வது தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

போர் நடைபெற்று வரும் பகுதிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பகுதிகள் தொடர்பான தகவல்களை கண்டறியும் நோக்கத்துடன் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

இந்த பகுதிகள் ஊடகவியலாளர்கள், இரஜதந்திரிகள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் செல்வதற்கு முற்றாக தடை செய்யப்பட்ட பிரதேசமாகும்.

இந்தப் பயணம் தொடர்பான நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் பயணத்துக்கான நாள் போன்றன தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகின்றன.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களை பார்வையிட பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், முன்னனி நிலைகளுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்களா என்பது தொடர்பாக தற்போது எதுவும் கூற முடியாது என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

போரில் ஈடுபடும் இரு தரப்பும் போர் குற்றங்களை மேற்கொள்வதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்த பின்னர், இலங்கை அரசாங்கம் சர்வதேச பார்வையாளர்களை அனுமதிப்பதற்கு இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# முல்லைத்தீவுக்கு இருவார காலத்தில் ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

கடந்த இரு வார காலத்தில் ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் முல்லைத்தீவில் விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி திவாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடை பெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு ஆணையாளர் மேலும் கூறியதாவது,

இந்த ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் இரு கட்டங்களாக வாடகைக்கு அமர்த்தப்பட்டு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவில் துறைமுகம் இல்லாத காரணத்தால் கப்பல் கடலில் நங்கூரமிடப்பட்டு சிறுபடகுகள் மூலமே தரையிறக்கப்பட்டன. பின்னர் இக் கப்பல்மூலமே முல்லைத்தீவில் உள்ள நோயாளிகள் திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவ்வாறு கடந்த பெப்ரவரி மாதம் முதல் இம் மாதம் 16 ஆம் திகதி வரையில் 4116 நோயாளிகள் திருகோணமலைக்கு கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மாதத்துக்கு மூன்று முறை இக் கப்பல் மூலம் முல்லைத்தீவுக்கு உணவுப் பொருட்களைஏற்றிச் செல்லும் நடவடிக்கை பல கஷ்டங்களுக்கும் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# துடுப்பாட்டப் போட்டி

(கோண்டாவில்)

சமூகங்களுக்கிடையிலான உறவை விளையாட்டின் மூலம் வலுப்படுத்தல் எனும் தொனிப் பொருளில் அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்திற்கும் கலைமகள் சனசமூக நிலையத்திற்கும் இடையில் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் துடுப்பாட்டப் போட்டி இம் முறை 15 தடவையாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-36)

# லயன்ஸ் கழக ஆளுநரினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 BI ஆளுநர் லயன்ஸ் நிமால் ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பரீஸ்லயன்ஸ் கழகத்திற்கு விஜயத்தை மேற் கொண்டு பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.

இவ்விஜயத்தின் போது ஆளுநரினால் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள் ஐந்து பேருக்கு கற்றல் தேவைகளுக்காக மாதாந்தம் தொடர்ச்சியாக உதவிப் பணம் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் பிறப்பிலேயே போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைக்கு சக்கர நாற்காலியும் சண் டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்து பத்து பாடசாலைகளுக்கு தலா ஒவ்வொரு கணனி உபகரணத் தொகுதியும் , சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு ரூபா 50ஆயிரமும் வழங்கப்பட்டது. (ஓ-6)

# வெள்ளி நற்சிந்தனை 63

# பக்தியின் மொழி தமிழ்

குழலிப் பருவம் மனித வாழ்வியல் ஒரு தனித்துவமான பருவமாகும். கண்ணெதிரே தோன்றும் காட்சிகளைக் கண்டு வியப்பும் ஐயமும் கொள்ளும் முற்றாத இளம் பருவம். எதையும் துருவியறிய விரும்பும் பருவம். கேள்விக் கணைகளால் எல்லோரையும் திணறடிக்கும் குழந்தைப் பருவம். இப்பருவத்திலே குழந்தையைப் பக்குவமாகப் பயிற்ற வேண்டும். பெற்றோரும் உற்றோரும் இப்பணியைச் செவ்வனே செய்யக் கடமைப்படடவர்கள். குழந்தை கல்வி கற்கும் பருவத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பணியை ஏற்று அவர்களை நன்நெறியிலே ஆற்றுப்படுத்துவர்.

திருஞான சம்பந்தர் அடியார்களில் வயதில் குறைந்தவர். மூன்று வயதிலே இறைவன் இறைவியுடன் காட்சிதரும் கோலத்தைக் கண்ணாரக் காணும் பெரு வாய்ப்பை பெற்றவர். அதனால் இறைவன் திருக்கோலத்தைக் காண்கின்ற போது எல்லாம் அவருடைய குழந்தைப் பருவத்திற்கேற்ற பக்குவத்தில் பல கேள்விகளைக் கேட்கும் இள் அடியாராக விளங்குகிறார். தான் தரிசனத்திற்காகச் செல்லும் தலங்களிலே விரும்பி உறையும் இறைவனுடைய திருக்கோலத்தையே உன்னிப்பாகப் பார்த்துப் பல்வேறு வினாக்களை எழுப்பிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

திருச்சேய்ஞலூர் என்னும் திருத்தலம் பற்றி அவர் பாடிய பதிகத்தில் பலகேள்விகளை இறைவனிடமே கேட்டு நிற்கிறார். குழந்தைப்பருவ நிலையில் இறைவன் பற்றித் தான் பிறர் மூலமாக அறிந்த செய்திகளையும் விளக்கமாக அறிய முற்படுகிறார். ஆலமர நிழலிலே நால்வர்க்கு அறமுரைத்த செய்தியை பதிகத்தின் முதலாவது பாடலிலே வினாவாக்கியுள்ளார்.

திருக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனின் கோலம் கண்ட போது அவர் குழந்தை மனம் வியப்படைகிறது. அப்பனும் அம்மையுமாக வீற்றிருக்கும் அழகுக்கோலம். சென்னியிலே சூடியிருக்கும் திங்களும் கங்கையும்,அரவை அணிந்து அழகாய்த் தோன்றுவதும் அவரைப் பரவசப்படுத்தின. முரண்பட்ட விடயங்களோடு இணைந்திருக்கும் அமைதியான இருப்பு அவர் சிந்தனையைத் தூண்டுகிறது. அது எப்படிச்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

சாத்தியமாயிற்று என நினைக்கிறார்.. விண்ணும் மண்ணுமாய் இணைந்திருக்கும் கோலம் கண்டு, அது பற்றி இறைவனிடமே கேட்டுத் தெளிவு பெற எண்ணுகிறார். எரியேந்தி ஆடுவது, முப்புரமெரித்தது, வேழம் உரித்தது, வேடனாய் வந்து அம்பு எய்தது, தந்தையைத் தண்டித்தவனுக்கும் தலைமைப் பதவி தந்தது, இராவணனுக்கு அருள் செய்தது, பிரமனுக்கும் அளிக்கும் அருள் செய்தது எனப் பல விடயங்களைக் கேட்டு விளக்கம் பெற எண்ணுகிறார். பத்து பாடல்களிலே பாடிக் கேட்க முனைகிறார்.

அவர், முதலிலே திருக்கோலத்தைப் பற்றிய வினாவை எழுப்புவது சம்பந்தருடைய குழந்தைப் பண்பு நிலையைக் காட்டி நாமும் இறைவனிடம் கேட்கலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

*“நீறு அடைந்த மேனியின் கண் நேரிழையாள் ஒருபாள்*
*கூறு அடைந்த கொள்கை அன்றி கோல வளர் சடைமேல்*
*ஆறு அடைந்த திங்கள் சூடி அரவம் அணிந்தது என்னே*
*சேறு அடைந்த தண் கழனிச் சேய்ஞலூர் மேவியவனே”*

# பொது தொல்லை பற்றி பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டியவை

இலங்கைப் பொதுத் தொல்லைகளை கட்டுப்படுத்துகின்ற பிரதான சட்டமாக 1979 ஆம் ஆண்டில் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை அமைகின்றது.

இலங்கை அரசியலமைப்பினை பொறுத்த வரையில் பிரிவு 27 (14) அரசானது சமூகத்தின் நன்மையை கருத்திற் கொண்டு சூழலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் பேணவும் கடமைப்பட்டுள்ளது.

பிரிவு 28 (d) இன் பிரகாரம் இலங்கையிலுள்ள ஒவ்வொரு நபரும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கவும் பேணவும் வேண்டும் என்பதுடன் தொல்லைக்கு எதிராகவும் பொதுச் சொத்துக்கள் விரயமடைதலுக்கு எதிராகவும் பாடுபடல் வேண்டும் எனக் கூறுகின்றது.

அரசியலமைப்பு பிரிவு 28 (e) இன் பிரகாரம் மற்றவர்களின் உரிமைகளுக்கும் சுதந்திரத் துக்கும் மதிப்பளித்தல் அவசியப் படுத்தப்பட் டுள்ளது.

பிரிவு 28 (f) இன் படியாக இயற்கையைப் பாதுகாக்கவும் அதன் செல்வங்களைப் பேணிப் பராமரிக்கவும் அரசு கடமைப்பட்டுள் ளது. மேற்போன்ற உரிமைகள் மீறப்படுகின்ற போது அவற்றிற்குரிய நிவாரணத்தினை உயர் நீதிமன்றம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். பொதுநலன் கருதிய வடக்கில் முறைகளும் சூழல் பாதுகாப்பு தொடர்பில் ஒரு மேம்படுத்தல் நடவடிக்கையாக அமைய முடியும்.

பொதுவான ஊறுகளையும் ஆபத்துக்களையும் தொந்தரவுகளையும் பொதுமக்களுக்கு அல்ல அயலில் வசிப்பவர்களுக்கு உண்டுபண்ணக்கூடிய சட்ட ரீதியற்ற செயல் அல்லது செய்யாமை பொதுத் தொல்லையென பிரிவு 261 தண்டனைச் சட்டக் கோவை குறிப்பிடுகின்றது.

இதே பிரிவினை இந்திய தண்டனைச் சட்டக் கோவை பிரிவு 268 இல் அவதானிக்கலாம். குற்றவியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 98 (1) பின்வருமாறு கூறுகின்றது.

1. நீதிவானொருவர் ஓர் அறிக்கை அல்லது வேறு தகவல் கிடைக்கப் பெற்றதன் மீது அவர் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய சான்று ஏதேனும் இருப்பின் அதனைப் பெறுவதன் மீதும் :

அ) பொதுமக்களால் சட்டமுறையாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப் படக்கூடியதான ஏதேனும் வழியினின்றும் துறைமுகத்தினின்றும் ஏரியினின்றும் ஆற்றினின்றும் அல்லது வாய்க்காலினின்றும் அல்லது ஏதேனும் பொது இடத்திலிருந்து ஏதேனும் சட்ட விரோதமான தடக்கு அல்லது தொல்லை அகற்றப்பட வேண்டும் என்று அல்லது

ஆ) சமுதாயத்தின் சுகாதாரத்திற்கு அல்லது உடநல வசதிக்கு ஊறு செய்கின்றது என்ற காரணத்தால் ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில் அல்லது எவையேனும் பண்டங்களை அல்லது வணிகப் பொருட்களை வைத்திருத்தல் நிறுத்தப்படுதல் வேண்டும். அல்லது அகற்றப்படுதல் வேண்டும். அல்லது தடை செய்யப்படுதல் வேண்டும் என்று அல்லது,

இ) ஏதேனும் கட்டடத்தை அமைத்தல் அல்லது ஏதேனும் பதார்த்தத்தைக் கையாளுதல் பெருந்தீயை அல்லது வெடி விபத்தை விளைவிக்கக் கூடுமாதலால் அது தடுக்கப்படுதல் வேண்டும் அல்லது நிறுத்தப் படுதல் வேண்டும் என்று அல்லது.

ஈ) ஏதேனும் கட்டடம் மரம் விழுந்து விடும் சாத்தியம் கொண்டிருப்பதாகவும் அதனால் அயலில் வசிக்கின்ற அல்லது தொழிலைக் கொண்டு நடத்துகின்ற அல்லது அண்மையில் செல்கின்ற ஆட்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடியதான அத்தகைய ஒரு நிலையில் இருக்கின்றதாகவும் அதன் விளைவாக அதனை அகற்றுதல் பழுது பார்த்தல் அல்லது அதற்கு ஆதாரம் கொடுத்தல் அவசியம் என்று அல்லது,

உ) அத்தகைய ஏதேனும் வழியுடன் அல்லது பொது இடத்துடன் ஒட்டியதாயுள்ள ஏதேனும் கேணிக்கு, கிணற்றுக்கு அல்லது அகழிக்கு பொது மக்களுக்கு நேரக் கூடிய அபாயத்தை தடுக்கும். அத்தகைய விதத்தில் வேலியிடப்படுதல் வேண்டும் என்று.

எப்போதாயினும் கருதும் போது அத்தகைய நீதிவான் அத்தகைய தடக்கினை அல்லது தொல்லையினை ஏற்படுத்தும் அல்லது அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டு நடத்தும் அல்லது அத்தகைய எவையேனும் பண்டங்களை அல்லது வணிகப் பொருட்களை வைத்திருக்கும் அல்லது அத்தகைய கட்டடம் பதார்த்தம் மரம், கேணி, கிணறு அல்லது அகழி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் ஆள் நிபந்தனையுடனான கட்டளையினால் நிர்ணயிக்கப்படற்பாலதான காலத்திற்குள்ளாக:

1. அத்தகைய தடக்கினை அல்லது தொல்லையினை அகற்ற வேண்டுமென அல்லது
2. அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலை நிறுத்த வேண்டுமென அல்லது அகற்ற வேண்டுமென அல்லது
3. அத்தகைய பண்டங்களை அல்லது வணிகப் பொருட்களை அகற்ற வேண்டுமென அல்லது
4. அத்தகைய கட்டடம் அமைக்கப்படுவதை தடுக்க வேண்டுமென அல்லது நிறுத்த வேண்டுமென
5. அதனை அகற்ற வேண்டுமென பழுது பார்க்க வேண்டுமென அல்லது அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டுமென அல்லது
6. அத்தகைய பதார்த்தம் கையாளப்படும் முறையை மாற்ற வேண்டுமென அல்லது
7. அத்தகைய மரத்தினை அகற்ற வேண்டுமென அல்லது
8. விடயத்திற்கேற்றாற் போல அத்தகைய கேணியினை, கிணற்றினை அல்லது அகழியினைச் சுற்றி வேலியடைக்க வேண்டுமென தேவைப்படுத்துகின்ற அத்தகைய நிபந்தனையுடனான கட்டளையினை ஆக்கலாம்.

**சட்டத்தரணி தி. திருச்செந்தில்நாதன்**

மேற்போந்த பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகார எல்லையானது மிகவும் பரந்தது என்பதுடன் பொது தொல்லையால் பாதிக்கப்பட்ட தனிநபர் ஒருவர் நீதிவான் நீதிமன்றில் தனிநபர் பிராது ஒன்றை தாக்கல் செய்ய முடியும். (தொடரும்)

# வெளிநாட்டு உணவுப் பொருட்களின் இறக்குமதி முற்றாக நிறுத்தப்படும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன



(கொழும்பு)

வெளி நாட்டு உணவுப் பொருட்களின் இறக்குமதி எதிர் காலத்தில் முற்றாக நிறுத்தப் படுவதுடன் அவ்வுணவு உற்பத்திகளை உள் நாட்டிலேயே மேற்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காணி எடுத்தற் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மற்றும் கமநல அபிவிருத்தி சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறுகையில்,

உலக உணவு நெருக்கடியை தவிர்த்துக் கொள்வதற்காகவே உலக நாடுகள் விவசாய உற்பத்தியில் அதிக அக்கறை காட்டுகின்றன.

இதன் அடிப்படையிலேயே எமது நாட்டிலும் இந்த விவசாயத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் "அப்பி வவமு ரட்டநகமு" என்ற திட்டத்தை ஜனாதிபதி முன் வைத்துள்ளார். அதற்கேற்ப உள் நாட்டு விவசாய உற்பத்திகள் மேம்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் எமது நாட்டில் விவசாய உற்பத்திக்கென கொள்கை ஒன்று வகுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் அதனை இப்போது நிறைவேற்றியுள்ளோம்.

உலக விவசாய ஸ்தாபனத்தின் சம்மேளனத்தில் அங்கீகரிக்கப்பட்ட 10 அம்ச திட்டங்களில் இலங்கை எதனையும் மீதப்படுத்தி இருக்கவில்லை.

எமது அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் விவசாயத்துக்கு பொருத்தமான ஒரு சதுர அடி நிலப் பரப்பையும் விட்டு வைக்கவில்லை. அது விவசாய உற்பத்திக்கென பயன்படுத்தப் பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் கூட சில நிரப்பரப்புக்கள் பயிர் செய்யப்படாத தரிசுநிலங்களாக காணப்படுகின்றன.

இதில் 50 வீதமான நிலப்பரப்புகள் தற்போது பயிர்ச் செய்கைக்கென்று பயன் படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான தரிசு நிலங்களை பயிர் செய்கைக்காக பயன்படுத்துவதன் மூலம் தேசிய உற்பத்தியில் விருத்தியை அடைய முடியும்.

அத்துடன் தேசிய -சர்வதேச சந்தைகளுக்கு என ஏற்ற வகையில் உற்பத்திகளை மேற்கொள்ள முடியும்.

இதற்கு விவசாய உற்பத்தி - சந்தைப் படுத்தலுக்கான சிறந்தவொரு முகாமைத் துவமும் அவசியமானது.

வடக்கு மீட்கப்பட்டதன் பின்னர் அங்கு மேற் கொள்ளப்படுகின்ற வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் அங்குள்ள உற்பத்திகளை சந்தைப்படுத்தவதற்கான வாய்ப்புகள் அமையும்.

இந்த நாட்டில் இரண்டு யுத்தம் நடைபெறுகிறது. ஒன்று புலிகளுடனானது. அடுத்தது உணவு உற்பத்தி யுத்தமாகும்.

இவை இரண்டையும் எதிர்நோக்கியிருப்பதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார். இருப்பினும் இவை இரண்டையும் முழுமையாக வெற்றி கொள்வோம் என்று சொல்லியிருக்கின்றார். இது நிறைவு பெறும்.

வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களை எதிர் காலத்தில் முற்றாக நிறுத்தி அவ்வுணவுப் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான பாரிய திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு இந்த சட்ட மூலம் இன்றியமையாதது என்றார். (ஓ-6)

# அழகுக் கலை பயிற்சி நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வைத்தீஸ்வராக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் பேசியல், மணப்பெண் அலங்காரம், சிகை அலங்காரம், கேக்ஐசிங், பெயின்ரிங் ஆகிய பயிற்சி நெறிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சிகள் இரண்டு மாத காலத்துள் முடிவடையும். இதில் கலந்து பயன் பெற விரும்புவோர் உடனடியாக அதிபர் மற்றும் அழகுக்கலை ஆசிரியர் செல்வி. குயின்ரா ஆகியோரைச் சந்தித்து பதிவுகளை மேற் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-6)

# கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு நோர்வே அரசாங்கம் நிதியுதவி

(கொழும்பு)

நோர்வே அரசாங்கம் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது. மிலிந்த மொரகொட நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைவர் நந்தகமகேக்கும் நோர்வே தூதுவருக்கும் இடையில் நிதியுதவி வழங்கும் உடன்படிக்கையொன்று கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

140 மில்லியன் ரூபா நிதியுதவிக்கான ஒப்பந்தத்தில் நோர்வே உயர்ஸ்தானிகர் டோரே ஹட்ரம மற்றும் மிலிந்த மொரகொட நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித் திட்ட பிரிவின் தலைவர் நந்த கொடகே ஆகியோரும் கைச்சாத்திட்டனர்.

2003 ஆம் ஆண்டில் இருந்து நோர்வே அரசாங்கம் மக்களை ஆற்றல்படுத்தும் மிலிந்த மொரகொட நிறுவனத்துக்கும் சர்வத்ர மற்றும் ஹோரிசொன் ஆகிய இரண்டு இந்திய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு நிதியுதவி அளித்து வருகின்றது.


இதுவரை 600 மில்லியன் ரூபா நிதியுதவியை இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக நோர்வே அரசாங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிக்கான இடங்களாக மன்னார், மட்டக்களப்பு மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் எல்லை கிராமங்களையும் இம்மூன்று அமைப்புக்களுக்கு 2009 இல் செயல்பாட்டுக்குரிய இடங்களாக ஒதுக்கியுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமானது வடக்கு கிழக்கில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றி நிலங்களை மீள் குடியேற்றத்திற்கும், வாழ்வாதாரத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் உரிய நிலங்களாக மாற்றுவதன் மூலம் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் திட்டத்துக்கு துணை புரிவதேயாகும்.

நிகழ்வில் நோர்வே உயர்ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி பிரிவின் தலைவி எட்லே ஹம்ரே, மிலிந்த மொரகொட நிறுவனத்தின் ஆலோசகர் இம்தியாஸ், இஸ்மாயில் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஓ-6)

# காம்பீர், டிராவிட், சச்சின் அரைச்சதம்; இந்திய அணி நிதானமான ஆட்டம்





(ஹமில்டன்)

காம்பீர்,டிராவிட்,டெண்டுல் கரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களை எடுத் திருந்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்ப யணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது–20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொட ரில் விளையாடுகின்றது.

இதில் இருபது–20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன் ஒரு நாள் தொடரை இந்தியா அணி 3:1 என்ற கணக்கில் சுவீகரித்தது.

இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ் தொடரின் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் ஹமில்டனில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித் தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 118 ஓட்டங்களையும் ரைடர் 102 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் இசாந்த் சர்மா 4 விக்கெட்டுக்களையும் முனாப் பட்டேல் 3,சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும்,ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

போட்டி ஆரம்பமாகி இந்திய அணி மேலதிகமாக 8 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் ஆரம் பத் துடுப்பாட்ட வீரர் சேவாக் 24 ஓட்டங்களுடன் ரன்–அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக காம்பீருடன் இணைந்த டிராவிட் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்தார்.

இதில் காம்பீர் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்ய இந்திய அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சிறப்பாக துடுப்பெடுத்தாடிய காம்பீர் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக டிராவிட்டுடன் இணைந்த டெண்டுல்கர் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுத்தார்.

மறுமுனையில் டிராவிட் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். எனினும் டிராவிட் 66 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழக்க இந்திய அணி 177 ஓட்டங்களை எடுத்து மூன்றாவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய லக்ஸ்மன் நிதானமாக துடுப்பெடுத்தாடி டெண்டுல்கருக்கு சிறப்பான இணைப்பை வழங்கினார்.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 61ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய லக்ஸ்மன் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய யுவராஜ் சிங் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் டெண்டுல்கர் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் 83.5 ஓவர்கள் மாத்திரம் வீசப்பட்ட நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக நிறுத்தப்பட்ட போது இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் டெண்டுல்கர் 135 பந்துகளில் 11 பவுண்டரிகள் அடங்கலாக 70 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்திருந்தனர்.

பந்து வீச்சில் மார்டீன் 2 விக்கெட்டுக்களையும் ஓபிறின் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## ஸ்ரையயன், ஹரிஸ் அசத்தல்; ஆஸி. முதல் இன்னிங்ஸில் சுருண்டது

ஸ்ரையன்,ஹரிசின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 209 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையு மிழந்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 57 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட்,2 இருபது–20,5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வென்று அவுஸ்திரேலிய அணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கிய நிலையில் மூன்றாவதும் இறுதியு மான டெஸ்ட் நேற்று கேப்டவுனில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச்சுழற் சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹயூக்ஸ்–ஹடிச் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை தந்தது.

இந்த ஜோடி 58 ஓட்டங்களை எடுத்த போது ஹயூக்ஸ் 33 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் பொன்டிங் (0),ஹசி (20),கிளார்க் (0) என அடுத்தடுத்து ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 81 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் தொடர்ந்து 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹடிச்–ஹடின் ஜோடி 71ஓட்டங்களை இணைப் பாட்டமாக எடுத்து சரிவிலிருந்து அணியை மீட்டனர். இதில் ஹடிச் 55 ஓட்டங்களுடனும் ஹடின் 42 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 158 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களையிழந் தது.


தொடர்ந்து 7ஆவது விக்கெட்டுக்கு இணைந்த மைக் பொனால்ட்–ஜோன்சன் ஜோடி ஓரளவு நம்பிக்கை அளித்தது. எனினும்மைக்பொனால்ட் 13, ஜோன்ஸன் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இறுதியில் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகலவிக்கெட்டுக்களையுமிழந்து 209 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் ஸ்ரையன் 4 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும் நிற்னி 2 விக்கெட்டுக்களையும் மோர்கல் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள்ஆட்டநேரமுடிபில்விக்கெட் இழப்பின்றி 57 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் பிறின்ஸ் 37 ஓட்டங்களையும் அறிமுக வீரர் ஜான் 15 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 38





இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களை மிழந்து 223 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 7 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட)8 ஓட்டங்களை எடுத்ததுடன் முரளிதரன் 5.இனிங்ஸ்களில் 8 ஓட்டங்களை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 333 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் முரளிதரன் 23.3 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 68 ஓட்டங்களைக் கொடுத்து சயிட் அன்வர்(54) அமீர் சொகைல் (20) சக்லைன் முஷ்ராக் (34) மொய்ங் கான் (30) ஜாவிட்(8) ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அணிக்கு நம்பிக்கையளித்தார்.

தொடர்ந்து முதலாவது இனிங்ஸில் 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 361 ஓட்டங்களை எடுத்து பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இலக்காக 252 ஓட்டங்களை நிர்ணயித்தது. இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 7 பந்து களில் (ஒரு பவுண்டரி உட்பட)10 ஓட்டங்களை எடுத்தார்.

பாலா


தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 209 ஓட்டங்களை மாத்திரமெடுக்க இலங்கை அணி42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலை செய்தது.

இதில் முரளிதரன் 20 ஓவர்கள் பந்துவீசி இரண்டு ஓட்ட மற்ற ஓவர் உட்பட 83 ஓட்டங்களைக் கொடுத்து அணித்தலைவர் ரமீஸ் ராஜா(25) இன்சமாம் உல் ஹக் (26)ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### முதலாவது கௌரவம்


இப்போட்டியில் முரளிதரன் 7 விக்கெட்டுக்களை (முதலாவது இனிங்ஸில் 5, இரண்டாவது இனிங்ஸில் 2) வீழ்த்தியதுடன் இரு இனிங்ஸிலும் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் சிறப்பான இரண்டு பிடிகளையும் எடுத்ததன் மூலம் இலங்கை அணியின் வெற்றிக்கு வழி வகுத்ததற்காக சர்வதேச கிரிக்கெட் அரங்கில் முதன் முறையாக ஆட்ட நாயகன் விருதை வென்றார். (பயணிக்கும்)

## எண் விளையாட்டு-43



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாகசெல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள் ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண்திரும்பவரக் கூடாது.

### நேற்யை பகுதிக்கான விடை



மாநகர சபை, யாழ்ப்பாணம்



## ஐ.நாவின்...

செயலாளரின் பேச்சாளர் ஒருவர் விடுத்துள்ளதாக ஏசியன் ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான ஆணையாளர் நவநீதம் பிள்ளை வடக்கில் மோதல்கள் காரணமாக இரண்டாயிரத்து 800 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 7 ஆயிரம் பேர் காயமடைந்ததாகவும் அறிக்கையொன்றில் தெரிவித்திருந்தார்.

எனினும் இந்தத் தகவல்கள் விடுதலைப் புலிகளின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டவை எனவும் அவை உறுதிப்படுத்தப்படாதவை எனவும் ஐ.நா. பொதுச்செயலாளரின் பேச்சாளர் தெரிவித்ததாக ஏசியன் ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச-14)

## வன்னி மக்க...

படையினரை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென அவர் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் எழுத்து மூல கோரிக்கையை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இலங்கையில் யுத்த நிறுத்த அமுலாக்கலை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் யுத்த பிரதேசங்களுக்கு தடையின்றி செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## எண்ணெய்...

அமைச்சர் இவ்வாறு தெரிவிக்கையில், ஜே.வி.பி யின் பின் வரிசை எம்பியான ரணவீரபத்திரண, பௌசி பாவம் என்றார். நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ஜே.வி.பி. எம்.பியான அனுரகுமார திஸாநாயக்க கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், எரிபொருள் விவகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றம் ரத்து உத்தரவுகளை பிறப்பித்திருந்தது. அதில் பெற்றோல் விலை குறைப்பு தொடர்பான உத்தரவு மட்டும் இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. எனினும் ஏனைய உத்தரவுகளின் பிரகாரம் எண்ணெய் இறக்குமதி உரிமை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து நிதியமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது என்றார். (ச-5)

## கெயர் பணி..

(வயது 24) என்பவரே கொல்லப்பட்டுள்ளார் என அந்த நிறுவனம் தெரிவித்தது. எறிகணைத் தாக்குதல் காரணமாக அவரது காலில் காயம் ஏற்பட்டதாகவும் போதிய மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தினால் அவர் மரணமானார் என்றும் தெரியவருகிறது. (ச-5)

## வன்னியில் இடம்பெற்ற வான், ஷெல்...

படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் அம்பலவன் பொக்கணை மற்றும் மாத்தளன் பகுதிகளில் நேற்று பகல் ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கிகள் வீழ்ந்து வெடித்துள்ளன. அதேவேளையில் தொலைதூர துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதில் 11 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் பச்சைப்புல்மோட்டைப் பகுதியில் நேற்று நான்கு தடவை விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்றைய வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் 90 பேருக்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

க.வேலாயுதம் (வயது 60), வை.லலிதா (வயது 24), இ.தினேஸ்குமார் (வயது 16), ஜெ.தர்சிகா (வயது 9), சு.நிரோஜினி (வயது 10), இ.பரமேஸ்வரி (வயது 35), ரா.பிரசாந்த் (வயது 4), அ.தருமராசா (வயது 67), சி.பிரபாகரன் (வயது 29), இ.சாந்தரூபன் (வயது 26), அ.வேணுஜன் (வயது 8), வே.ஜெயந்தன் (வயது 24), வி.கிருசாந்தன் (வயது 11), செ.டானியல் (வயது 62), ந.இராசம்பாள் (வயது 70), சொ.நிரோஜன் (வயது 9),

த.சத்தியரூபி (வயது 36), சி.கலா (வயது 52), செ.பொன்னன் (வயது 52), ம.தாரா (வயது 32), ஆ.ஜெயகௌரி (வயது 29), த.வஜந்தினி (வயது 22), குலமோகன் (வயது3), வி.பார்த்தீபன் (வயது 5), மு.சுதாகரன் (வயது 28), வி.செல்வராசா (வயது 48), ம.கஜந்தினி (வயது 6), இ.வீரசிங்கம் (வயது 28), ந.சரவணமுத்து (வயது 32), ஏ.பாலமணி (வயது 59), சு.முகுந்தன் (வயது 28), சு.அப்பையா (வயது 3), ச.சதீஸ் (வயது 45), அ.தமிழ்நிலவு (வயது 5 மாதம்), க.ஈழவேந்தன் (வயது 3 மாதம்), க.திலகேஸ்வரி (வயது 13) ஆகியோர் கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை வன்னியில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் நேற்று முன்தினம் 67 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 97 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் மேலும் ஒரு அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர் படுகாயமடைந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், வலைஞர்மடம், இடைக்காடு, அம்பலவன்பொக்கணை மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்களில் நேற்றும் ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கிகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதில் 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் 45 பேர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளையில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளின் மீது நேற்று விமானப் படை விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 37 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 52 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

த.சத்தியரூபி (வயது 36), ந.இராசம்மா (வயது 70), செ.டானியன் (வயது 62), க.சிவக்கொழுந்து (வயது 60), அ.சுரேந்தினி (வயது 28), அ.சுஜாத்தா (வயது 3), ச.தங்கராசா (வயது 45), சி.நிரோசா (வயது 10), செ.நிரோஜன் (வயது 9), ச.சத்தியரூபி (வயது 26), இ.சபேசன் (வயது 24), த.தியாகராசா (வயது 65), யோ.ரெஜீபன் (வயது 9), யோ.அந்தோனிப்பிள்ளை (வயது 59), க.கலைவாணன் (வயது 8),

ரூ.சர்மிளா (வயது 30), ஜெ.சசிகலா (வயது 32), ந.திருபாலசிங்கம் (வயது 55), ந.இராசமணி (வயது 70), சி.நிரோஜினி (வயது 10), ச.தர்சினி (வயது 26), த.தியாகராசா (வயது 60), து.துவாரகா (வயது 3), த.தர்மிகா (வயது 5), வே.சர்மியா (வயது 10), ச.கண்மணி (வயது 48), க.பத்மசீலா (வயது58), நீ.வேணி (வயது 44), சி.கோபிகன் (வயது 16), சி.கலாதேவி (வயது 39), ச.ஜெனோபா (வயது 30) ஆகியோர் உயிரிழந்தவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனையோரின் பெயர் விபரம் வெளியாகவில்லை.

இதேவேளையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒரு பணியாளர் படுகாயமடைந்துள்ளார்.

பணியிலிருந்தபோது படையினரின் துப்பாக்கிச் சூடு இவர் மீது பாய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. மகேந்திரராசா ராம்குமார் (வயது 27) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (ச-5)

## அரசாங்க...

இதன்மூலம் மக்களின் வாழ்க் கைச் செலவு குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்புக்களின் மூலம் குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாயினை சேமிக்க முடியும். எனவே சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு மாறாக மக்களின் கொள்வனவு இயலுமை உயர்வடைந்துள்ளமையை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## புதுமாத்தளன் நோக்கி...

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மோதல்களில் 250இக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பல நூற்றுக்கணக்கான படையினர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக இணையத்தளங்கள் தெரிவித்தன.

புதுக்குடியிருப்பு மருத்துவமனையை அண்டிய பகுதிகள், புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு வீதி மற்றும் இரணைப்பாலைச் சந்தி ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற மோதல்களிலேயே 250இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதுக்குடியிருப்பில் புலிகள் நடத்திய தாக்குதல்களில் காயமடைந்த படையினரில் 125பேர் கொழும்பு தேசிய மருத்துவ மனையிலும் இராணுவ மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்களிலும் மற்றும் வேறு தாக்குதல்களிலும் இதுவரை 610 படையினர் கொல்லப்பட்டும் 700 பேர் வரை காயமடைந்தும் உள்ளதாக கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள நிலையில் கடந்த சில நாட்களில் நடைபெற்ற மோதல்களில் 480 படையினர் கொல்லப்பட்டும் 600 பேர் காயமடைந்தும் உள்ளதாக இராணுவ உயர் அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர். (ச-5)

## மோதல்கள் நிறுத்தப்படாவிட்டால்...

மோதல்களில் அகப்பட்டு அவதியுறுகின்ற சுமார் இரண்டு இலட்சம் மக்களின் நிலைமை குறித்து வெளியுலகம் இன்னமும் பெருமளவிற்குத் தெரிந்து கொள்ளாமலேயே இருக்கிறது என பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் எம்.எஸ்.எப். என்று அழைக்கப்படுகின்ற எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பின் தலைவி கூறியுள்ளார்.

இந்த மோதல்களில் நூற்றுக் கணக்கான சிறுவர்கள் உட்பட 2 ஆயிரம் வரையிலான பொதுமக்கள் இறந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கூறிய சில நாட்களின் பின்னர் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் இடம்பெறுகின்ற மிகக் கொடூரமான சண்டைகளில் பொதுமக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வவுனியாவிலிருக்கின்ற மருத்துவமனையொன்றில் துப்பாக்கி ரவைகளாலும் சன்னங்களாலும் தாக்குதலிற்கு உள்ளாகி காயமடைந்த மக்களிற்கு நாம் சிகிச்சை வழங்கி வருகிறோம்.

மோதல் பகுதிகளில் அகப்பட்டிருக்கின்ற பொது மக்களின் கதைகள் மிகவும் பயங்கரமானவை. நான்கு மாதங்களாக ஒரு பதுங்கு குழியில் தனது குழந்தையுடன் ஒளிந்திருந்த ஒரு தாயை நாம் பார்த்திருக்கிறோம்.

இன்னுமொரு, பெண்ணின் இரண்டு குழந்தைகள் எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்திருக்கிறார்கள்.

பின்னர் அந்தப் பெண்ணின் கணவருக்கு எறிகணை தாக்கியதில் அவரது காலும் ஒரு கையும்இழந்துபோன நிலையில் பின்னர் அவரும் காணாமல் போயிருக்கிறார் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிற மக்களின் அவல நிலை குறித்து உலகத்திற்கு எதுவுமே தெரியாது.

35 கிலோமீற்றர்கள் வரை சுருங்கிப் போயிருக்கிற ஒரு சிறிய நிலப்பரப்பில் இந்தத் தருணத்தில் இரண்டு இலட்சம் மக்கள் தங்கியிருக்கிறார்கள். அந்த இடத்தில் பெரும்பாலனவை கடற்கரையும் காடும்தான். அங்கு சிறிய கொட்டகைகளின் கீழே அவர்கள் பதுங்கியிருக்கிறார்கள்.

மழையும் பெய்ய ஆரம்பித்திருக்கிறது. அங்கு போதிய உணவு கிடையாது. போதிய குடிநீர் கிடையாது. மலசலம் கழிக்க அந்த மக்களுக்கு இடம்கிடையாது. போதுமான மருந்து கிடையாது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களைச் சுற்றித்தான் கடுமையான சண்டை நடந்துகொண்டிருக்கிறது.

இவையெல்லாம் உயிர்வாழ்வதற்கான ஒரு கௌரவமான வழியல்ல என எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பின் இலங்கைக்கான தலைவி அன்ன மரி லோவ்ப் கூறியுள்ளார். இதேவேளை வட பகுதியில் இலங்கை அரசினால் நடத்தப்படுகின்ற முகாம்களில் தங்கியுள்ள மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் பொது மக்கள் மோதல் பகுதிகளில் இருந்து வெளியேறுவதை விடுதலைப் புலிகள் தடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ச-14)


## வேலை வாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக் தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றி வரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.

வேலை பற்றி

* 3மாத பயிற்சிக் காலத்தை உடையது.
* இக்காலப் பகுதியில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
* பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாக்கும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
* பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

அடிப்படைத் தகைமை

* G.C.E. O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி
* 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 30.03.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல. 2209
C/O, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(2209)



## உடன் தேவை

* ஒவ்செற் இயந்திர இயக்குநர்கள்
* பயிலுநர்கள்

யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள தகுதியுடையவர்கள் நேரில் வரவும்.

இல.03, 02 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி



ANVIL
The seat of formal English
(2413)



New Science Hall & College
2011 Batch
Mechanics
சனி, ஞாயிறு 9-10
ஆரம்பம் 21.03.2009
By.R.குகன்
(2414)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.